# விடுதலை இறையியல்



வி.பி

நான் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sr. M. Bertrand
8.8.88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இறையியல்

வி. பி.

தி. செல்வமனோகரன்
141, வெளியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

நான் வெளியீடு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வெளியீடு : 6

முதற்பதிப்பு : மார்கழி 27, 1986

விலை : ரூ. 10/-

அச்சேற்றுவதற்குத் தடையில்லை;

எஸ். யே. இம்மனுவல்
22-12-1986

அச்சேற்றலாம்:

✠ வ. தியோகுப்பிள்ளை,
யாழ். ஆயர்,
22-12-1986

"VIDUTHALAI IRAIYIYAL"

Liberation Theology

(c) Fr. Vincent Patrick, O. M. I.
O. M. I. Seminary,
Colombuthurai, Sri Lanka.

Published by

Naan Publications,
Oblate General Delegation,

Printed by

Mani Osai Printers,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

தற்போது நாம் சென்று கொண்டிருக்கும் காலம் விசேடமாக எம்மினத்தவர்க்கு கண்ணீர் நிறைந்த காலம். மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றித்துச் சீவிக்கவே திருச்சபை இயங்குகின்றது (இ. உ. தி. 1). எம் நாட்டிலும் இத்திருச்சபை பொருத்தமான முறையில் செயற்பட வேண்டுமாயின் கிறிஸ்து நமக்குக் கொண்டுவந்த விடுதலையின் சகல அம்சங்களையும் நன்கு உணர்ந்து செயற்படவேண்டும். தனியான பாவத்திலும் சமூக பாவத்திலுமிருந்து விடுதலை பெறத் தவிக்கும் மனுக்குலத்திற்குக் கிறிஸ்து வழி காட்டியிருக்கிறார்.

இவ்வியல் நம்மத்தியில் இப்போதுதான் தளிர்விடத் தொடங்குகின்றது. இவ்வாரம்ப பருவத்திலே 'விடுதலை இறையியல்' என்ற தலைப்பில் அருட்திரு வின்சன்ற் பற்றிக் அ. ம. தி. வெளியிடும் சிந்தனைகள் எம் மக்கள் மத்தியில் உறைந்திருக்கும் சில அடிமைத் தன்மைகள் அகல கிறிஸ்தவர்களைச் செயலுக்குத் தூண்டும் சிந்தனைகள்.

முயற்சியுடன் முன்னின்று உழைக்கும் அருட்திரு வின்சன்ற் பற்றிக் அ. ம. தி. அவர்களின் ஆக்க வேலைகளை ஆதரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எஸ். யே. இம்மனுவல்

அதிபர்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.
18–12–86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"சித்த நினைவுஞ் செயுஞ் செயலும் நீயென வாழ்
உத்தமர்க்கான உறவே பராபரமே"

— தாயுமானவர்

இதயம் ஓயாது அடித்துக்கொண்டிருக்கிறது. உடல் அதேபோல் உழைத்துக் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு இன்றியமையாதது இறையருள்.

சமயம் என்றால் மனிதனில் இயல்பாக அமைந்திருக்கும் தெய்வீகம் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். இத்தெய்வீகம் நாஸ்திகரிடமும் காணப்படுகிறதென்பதே சுவாமிகளின் கருத்து. இந்த உண்மையை இலகுவில் உணராத மனித கூட்டம், தனிமனிதனாகவும் சமூகரீதியிலும் அடிமைப் பட்டு அவலப்படுவது கண்கூடு.

இந்தப் பின்னணியில், இதற்கு மிகப் பொருத்தமாக வெளியிடப்படும் 'விடுதலை இறையியல்' இன்னல்படும் எமது இனத்திற்கு அரிய வரப்பிரசாதமாகும். எனவே, இந்நூலைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பகவத் கீதையில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட சுலோகங்களில் ஒன்று வாழ்க்கைக்கு முரண்பட்டதுபோலத் தோன்றுகின்றது.

"தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பயன்களில் உரிமை பாராட்டாதே. செய்கையின் பயனைக் கருதி மனக்கிலேசம் அடையாதே. தொழில் செய்யாமலும் இராதே. வெற்றி தோல்விகளை சமமாகக் கொண்டு கருமஞ்செய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் இல்லாமலும் பயனை விரும்பாமலும் ஒருவனும் செயலில் ஈடுவடுவதில்லை. ஆனால் பெரும்பாலோர் சுயநலத்திற்காகவும் பயனைக் கருதியும் தொழிலைச் செய்கின்றனர். இவ்விதம் செய்யப்படும் கருமமே மனிதனுக்குத் துன்பம் விளைவிக்கிறது. ஈதை சொல்வது செய்யும் தொழில் செவ்வனே செய்யப்பட்டால் பயன் தானாகவே வரும். அதனைவிட்டு பயபரப்படையாதே.

நாளை விளையும் பயிர் இன்று செய்யும் ஒழுங்கான முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு காரியத்திற்கும் அதற்கு ஏற்ற பலன் இல்லாமல்போவதில்லை.

தொழில் என்னும்போது சமூகத்திலிருந்து மனிதன் எவ்விதத்திலும் பிரிக்கப்படுவதில்லை. சிருட்டியின் சிறப்பு ஓர் உயிர் மற்றோர் உயிருக்குத் துணைபுரிந்து வாழ்வது.

பொதுநலம், ஒத்துழைப்பு என்று சொல்லும்போது மனித சமூகத்தை மட்டுமே நாம் நினைப்பது வழக்கமாகி விட்டது. ஆனால் இன்று மனிதன் இயற்கையினைப் படாதபாடுபடுத்தி அதன் செல்வத்தை அபகரிக்கிறான். நாடுகளும் அவற்றின் ஆட்சிகளும் இயற்கையின் சமநிலையைப் பாழ்படுத்துகின்றன.

இன்றைய உலகம் படும் கஷ்டங்கள் பலவும் இந்தக் கொடுமையாலே நிகழ்கின்றன. பேராசையே இதன் காரணம். உள்ளத்துறவு தனிமனிதனுக்கு எவ்வளவு அவசியமோ, மனித சமுதாயத்துக்கு அவ்வளவு அவசியமென அறிக.

ந. சபாரத்தினம்

முன்னைநாள் அதிபர்,
யாழ் இந்துக் கல்லூரி,
ஈழநாடு நிர்வாக ஆசிரியர்,
அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்.
23–12–1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மனிதன் மனிதனாக வாழமுடியாத நிர்ப்பந்தம். அது சமுதாயம் செய்த ஒப்பந்தமோ என்று எண்ணும்படி இன்று இனம், மதம், பாரம்பரியம், பண்பாடு என்று பல்வேறு சக்திகள் வெவ்வேறு கோணங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன; அடிமைப்படுத்துகின்றன. மனிதன் மனிதனிடமிருந்து பிரிக்கப்பட்டு, அந்நியமயமாக்கப்பட்டு, உறவுகளைத் துறந்த நிலையில், உரிமைகளை மறந்த நிலையில் இறப்பின்பின் எய்துகின்ற வாழ்க்கை நிலையை முன்வைத்து நிகழ்கால வாழ்க்கையை நீறுபூத்த நெருப்பாக மாற்றுகின்ற அவலங்கள் அழியவேண்டும்; அடிமைத்துவம் அழிக்கப்படவேண்டும்.

மனிதன், உடல், உள்ளம், ஆன்மா சார்பான முழுவாரியான முழு மனித விடுதலையை எய்தல்வேண்டும் என்பதை விடுதலை இறையியல் வேண்டிநிற்கின்றது. உணர்வூட்டம் பெறுவதன்மூலம் மரத்துப்போன நிலையிலிருந்து மனிதன்விடுபட்டு தனதும் பிறரதும் நியாயமான தேவைகளை நிறைவுசெய்ய முற்படுவதோடு எதற்கும் எவர்க்கும் அடிமையாகாதநிலையில் வாழவேண்டும். நிறுவனமயமாக்கப்பட்ட பாவச்சூழல் நிர்மூலமாக்கப்படவேண்டும். எல்லோருக்கும் மகிழ்வான வாழ்வு வழங்குகின்ற சூழல் இயல்பாக்கம் வளர்க்கப்படவேண்டும்.

எனவே, நிகழ்காலத்தில் நாம் எதிர்கொள்கின்ற இருள் சார்ந்த பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க, தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயற்படத் தூண்டுகோலாக இந்நூல் அமையவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

அன்பும், அறமும் அருகிப்போன இக்கால கட்டத்தில் தனியனாகவும், சமூகமாகவும் நாம் எதிர்கொள்ளும் சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்கும் இடர்பாடுகளுக்கும் வாழ்வும், வழியும், ஒளியும் உண்மையுமாகிய கிறிஸ்துவே விடையாக விளங்குகின்ருர் என்பதை இங்குவலியுறுத்த விரும்புகின்றேன். எல்லோருக்கும் எல்லாமாக இருக்கும் அவர் அடிமைத்தனத்தில் வாழும் எம் அனைவர்க்கும் விடுதலை அளிப்பாராக.

இறுதில், என்றும் வாழும் இறைவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மேலும், இந்நூலை வெளியிட தோளோடுதோள் நின்று தட்டி எழுப்பி, ஆசியுரை அளித்த அருட் கலாநிதி எஸ். ஜே. இம்மனுவல் அவர்களுக்கும் அணிந்துரை அளித்த அறிஞர் ந. சபாரத்தினம் அவர்களுக்கும் எழுத்துத்துறையில் எழுச்சிபெற அக்கறையோடு ஆசிநல்கும் யாழ். அமலமரித்தியாகிகள் சபைத்தலைவர் அதிவண. இராயி பொன்னையா அவர்களுக்கும் அயராது உழைப்பு நல்கிய மணியோசை அச்சகத்தினருக்கும் அட்டைப்படத்தை சிறப்புடன் வரைந்த வி. கே. அவர்கட்கும், ஏனைய வாசக அன்பர்களுக்கும் எனது அன்புகனிந்த நன்றிகள்.

வி. பி.

அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.
27- 12- 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே . . . . .

| | | |
|---|---|---|
| 1. | மனிதமாண்பின் மகத்துவம் | 9 |
| 2. | உழைப்பின் உயர்வு | 17 |
| 3. | இறையியல் மறுமலர்ச்சி | 26 |
| 4. | விடுதலை இறையியலின் வரலாறு | 32 |
| 5. | விடுதலையும் மனித முன்னேற்றமும் | 36 |
| 6. | விடுதலை வீரன் கிறிஸ்து | 42 |
| 7. | மீட்பும் விடுதலையும் | 48 |
| 8. | அருட்சாதன விடுதலை | 54 |
| 9. | வறுமையும் புரட்சியும் | 61 |
| 10. | சமுதாய விடுதலை | 69 |
| 11. | மார்க்சியமும் விடுதலை இறையியலும் | 76 |
| 12. | வரலாற்றில் இறைவன் | 81 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பின் மகத்துவம்

## 1. இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன் மனிதன்

*"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக,*
*மனுவைப் படைத்தான் தனை வணங்க."*

இறைவன் தனது சாயலாக மனிதனைப் படைத்ததின் நோக்கம் மனிதன் சக படைப்பாளியாக உலகினில் விளங்கவும் படைப்புப் பொருட்கள் அனைத்தையும் பயன்படுத்தி ஆண்டு நடத்துவதன் மூலம் மாண்புமிகு மனிதனாய் சிறப்புறவும் அத்தோடு படைத்த பரமனை நன்றியுணர்வோடு மாட்சிமைப் படுத்தி வாழவுமேயாகும்.

"மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி அக்கறை கொள்ள அவன் யார் என்று சொல்லத் தோன்றுகின்றது! வானதூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்; மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர். உம் படைப்புகள் அனைத்தின்மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்; அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகள், வயல் வெளியில் உலவும் விலங்குகள் அனைத்தும் அவனுக்குப் பணியச் செய்தீர். வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள், அதில் நீந்தும் அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்" (சங். 8/4–8).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், கடவுள் மனிதனைத் தனியாகப் படைக்கவில்லை; ஏனெனில் ஆரம்பத்திலிருந்தே, "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (ஆதி. 1 : 27). அவர்களுடைய அன்புறவு மனிதர்களிடையே எழும் ஒன்றிப்பின் முதல் உருவமாகும். ஏனெனில் மனிதன் இயல்பாகவே சமூகப் பண்புடையவன். ஆகவே, பிறரோடு தொடர்புகொள்ளாமல் அவனால் வாழவோ, தன் திறமைகளை வளர்த்துக் கொள்ளவோ முடியாது.

அறிவும் சுதந்திரமும் பெற்றவனாய் படைப்புக்கள் அனைத்தினதும் மன்னனாக மாண்புடன் வாழ இறைவனால் அழைக்கப்பட்டான் மனிதன். அவனது மாண்புமிகு வாழ்க்கையின் நிறைவு அவன் இறைவனோடு கொள்ளும் நிரந்தர உறவில் தங்கியுள்ளது. அவன் இறைவனோடும் மக்களோடும் கொள்ளும் தொடர்பில் பலப்படுத்தப்படும்போது அவனது மாண்பு சிறப்புப் பெறுகிறது. இந்த உறுதியான உறவைப் பலவீனப்படுத்துவதாய் கடவுள் மறுப்புக் கொள்கைகள் விளங்குகின்றன என்றும் மனிதமாண்பை அழிக்க முயலும் இக்கொள்கைகளை வெறுத்து ஒதுக்கவேண்டும் என்றும் 2ம் வத்திக்கான் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனிதன் தனது சுதந்திரத்தைப் பயன்படுத்தி இறைவனின் அழைப்பைப் புறக்கணித்தான். பாவம் பாரினில் புகுந்தது. எனினும் பாவத்திலிருந்து பாருலகை விடுதலை செய்ய இறைத்திட்டத்தின்படி இறைமகன் கிறிஸ்து அனுப்பப்பட்டார். இறைவனே மனிதனாகி மனிதனது அகவாழ்வைப் புதுப்பித்தார்.

உடலையும் ஆன்மாவையும் ஒன்றாய்க்கொண்ட மனிதன் தனது உடல் அமைப்பின் மூலமாக உலகிலுள்ள மூலப் பொருட்களைத் தன்னுள் கொண்டிருக்கின்றான். அவன் வழியாக அவை மகிமையடைகின்றன. எனவே, மனிதன் தனது உடலை வெறுத்தலாகாது. தன் உடலை அவன் நல்லதாகவும் மதிப்பிற்குரியதாகவும் கருத வேண்டும். தீய நாட்டங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிய அதனை அனுமதித்தலாகாது (இன்றைய உலகில் திருச்சபை 14).

## 2. ஞானத்தால் நிறைவெய்தும் பகுத்தறிவு

ஞானம் என்பது பகுத்தறிவிற்கு மேலானது. பகுத்தறிவி னால் மட்டும் முழுமையான நிறைவை அடைய முடியாததால் ஞானம் என்ற இறைவனின் கொடை தேவைப்படுகின்றது.

இறைவனது அறிவின் ஒளியில் பங்குபெறும் மனிதன் தன் புத்தியால் எல்லாப் பொருட்களையும் தான் கடந்து நிற் பதாகச் சரியாக மதிப்பிடுகின்றான். இடைவிடாது தன் திற மையை ஊக்கமுடன் ஆக்கச் செயற்பாடுகளில் பயன்படுத்தி யதால் அவன் அறிவியலிலும் தொழில் நுணுக்கக் கலையிலும் வேறு பல துறைகளிலும் உண்மையாகவே முன்னேறியுள் ளான். உலகை ஆய்ந்தறிவதிலும் அதனைத் தனக்குக் கட்டுப் படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளான். விஞ்ஞான ஆராய்ச் சிகளின் பயனாக மனிதன் மேலும் மேலும் உலகின் மீதுள்ள தனது அதிகாரத்தை, ஆதிக்கத்தை அதிகரித்துள்ளான்.

அறியும் இயல்பு கொண்ட மனிதன் ஞானத்தால் நிறைவு பெறுகின்றான். உண்மையையும் நன்மையையும் விரும்பித் தேட மனிதனின் மனம் ஞானத்தால் ஈர்க்கப்படுகின்றது. ஞானத்தால் நிறைந்த மனிதன் காணப்படுவனவற்றினின்று காணப்படாதனவற்றிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றான்.

மனிதன் புதிதாகக் கண்டுபிடிப்பன எல்லாவற்றையும் மனிதப் பண்பு வாய்ந்தனவாக மாற்றக்கூடிய ஞானம் முற் காலத்தைவிட இக்காலத்திற்குத் தேவை. ஞானம் மிகு மனி தர்கள் தோன்றாவிடின் உலகின் எதிர்காலம் இடருக்குள்ளா கும். மேலும் பொருளாதாரச் செல்வத்தைக் குறைவாகக் கொண்டிருப்பினும் ஞானச் செல்வத்தை அதிகமாகக் கொண்ட நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு உதவவேண்டும். இவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக ஞானவளர்ச்சி பரவலாக்கப்படுவதன் மூலம் உலக வளர்ச்சி மேம்படுத்தப்படும்.

## 3. உள்ளத்தில் வரையப்பெற்ற உன்னதச் சட்டம்

உள்ளத்தில் வரையப்பெற்ற உன்னத சட்டம் மனிதனை மனிதனாக மனிதமாண்புடன் வாழவைக்கின்றது. "இன்னா செய்தாருக்கும் நன்னயம் செய்து நாணிடச்செய்" என்று வள்ளுவன் கூறுவதைப் போன்று நல்லதை எப்பொழுதும் செய்யவும் தீமையை அகற்றவும் அவனுக்கும் அறிவுறுத்தும் ஒரு குரலொலி உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஆத்மாவின் இராகங்களாக ஒலிக்கின்றது; எதனை எப்பொழுது செய்ய வேண்டும் என்றும் எதனைச் செய்யக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுகின்றது. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஒலிக்கும் இக்குரலொலி இறைவனின் திருச்சட்டமாக மனிதனின் உள்ளத்தில் வரையப்பட்டுள்ளது. இதுவே மனச்சான்றாகும். மனிதனின் மிக மறைவான மையமும் திருவிடமுமாக மனச்சான்று விளங்குகின்றது. அங்கே அவன் கடவுளோடு தனித்திருக்கின்றான் அவன் உள்ளத்திலே அவருடைய குரல் எதிர்ஒலிக்கின்றது. கடவுளுக்கும் பிறருக்கும் காட்டும் அன்பால் நிறைவுறும் கட்டளையை மனச்சான்று வியத்தகுமுறையில் வெளியிடுகின்றது. மனச்சான்றுக்குப் பிரமாணிக்கமாயிருந்து உண்மையைத் தேடி அறியவும் தனிப்பட்டவரது வாழ்க்கையாலும் சமூகத்தொடர்புகளாலும் எழும் ஒழுக்கச்சிக்கல்களுக்கு உண்மையில் விடைகாணவும் கிறிஸ்தவர்கள் பிறமனிதர்களுடன் ஒன்றித்திருக்கின்றார்கள். எனவே, எவ்வளவுக்கதிகமாக மனச்சான்று நேர்மையானதாக உள்ளதோ அவ்வளவுக்கதிகமாக தனி மனிதரும் குழுக்களும் குருட்டுபோக்கிலிருந்து விலகி, ஒழுக்கத்தின் உண்மை விதிகளின்படி அமைந்து நடக்க முயல்கின்றார்கள். தவிர்க்கமுடியாத அறியாமையினால் பலவேளைகளில் மனச்சான்று தவறநேரிட்டாலும் அது தன்மாண்பை இழப்பதில்லை. ஆனால் உண்மையையோ நன்மையையோ தேடு

வதில் சிறிதும் கவலைகொள்ளாத ஒருவனைப்பற்றியோ பாவப் பழக்கத்தால் படிப்படியாக ஏறக்குறைய குருடாகிவிடும். மனச்சான்றைப் பற்றியோ மேற்கூறியவாறு சொல்லமுடியாது. (இன். உல. திருச்சபை 16)

## 4. சுதந்திரத்தின் மாட்சி

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு சுதந்திரமில்லா நிலையில் மனிதன் வாழ்ந்துகொண்டிருப்பின் அறநெறிக் கோட்பாடுகள் பொருத்தமற்றவையாகவே காட்சியளிக்கும் ஒருவன் நல்லனவற்றை வளர்க்கவும் தீயனவற்றை விலக்கவும் அவசியமானது சுதந்திரமே. உண்மையான சுதந்திரம் மனிதன் தன்னிலே இறைவனின் சாயலைக் கொண்டிருக்கின்றான் என்பதற்கு அடையாளமே மனிதன் தானாகவே இறைவனைத்தேடி நாடி வரவேண்டுமென்பதற்காக மனிதனைச் சுதந்திரமாக இறைவன் வாழ வைத்துள்ளான். மனச்சான்று என்னும் உள்ளுணர்வால் உந்தப்பட்டு சுதந்திரத்தோடு செயலாற்றுவதில்தான் மனிதனின் மாண்பு தங்கியுள்ளது.

## 5. பொதுவான உரிமைகள்

சமுதாயப் பிராணியாக வாழும் தனிமனிதனுக்கு நியாயமான முறையில் அவன் தனது உரிமைகளை அனுபவிக்க ஆவன செய்ய வேண்டியது சமுதாயத்தின் கடமையாகும். சமுதாயத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவேண்டுமாயின் தனிமனிதனின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும்; கடமைகள் நிறைவேற்றப்படவேண்டும். அவனியில் அமைதியின் அவசியத்தை உணர்த்த 23 ஆம் அருளப்ப பாப்பரசர் அதனை அடிப்படை ஆதாரமான தனிமனித உரிமைகளையும் கடமைகளையும் 'அவனியில் அமைதி' சுற்றுமடலில் நன்கு வரையறை செய்துள்ளார். ஒவ்வொரு மனிதனும் ஒரு தனி ஆள். அதாவது, மனித இயல்பு, அறிவு, விழைவு என்ற காரணங்களைக் கொண்ட ஒருவன் என்ற அடிப்படையில் மனித இயல்பிலிருந்து நேரடியாகவும் உடனடியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு உரிமைகளும் கடமைகளும் பிறக்கின்றன. இவை எல்லோருக்கும் பொதுவானவை. இவை எல்லோருக்கும் சொந்தம். ஒரு மனிதன் தனது அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள அவனுக்கு உரிமை உண்டு. இந்த உலகில் வாழ்வதற்கான உரிமையும் அவனுக்குகந்த வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொள்வதற்கான உரிமையும் இன்றியமையாதவை. உணவு, உடை, உறைவிடம், ஓய்வு உடல் நலம் ஆகியவை அவனது முக்கிய தேவைகளாகும்.

இயற்கையாகவே தன்மதிப்பையும் நற்பெயரையும் பேணிக்காக்கும் உரிமை ஒருவருக்கு உண்டு. தனது கருத்துக்களை வெளியிடவும் தான் விரும்பிய துறையில் கல்வி கற்கவும் தொழிற்பயிற்சி பெறவும் உரிமையுண்டு.

## 6: சமய சமூக உரிமைகள்

சமுதாயத்தில் ஒருவர் மனச்சான்றின்படி இறைவனை வழிபடும் உரிமையையும் மறுப்பதற்கில்லை. 13 ஆம் சிங்கராய பாப்பரசர் ''இப்புனிதமான உரிமை எவ்வித தாக்குதலுக்கும் அநீதிக்கும்மேலாக உயர்ந்து நிற்கின்றது'' என்று வலிறுத்தி இறைவனது பிள்ளைகளின் உண்மையான இந்த சுதந்திரம் மிக உன்னத முறையில் மனிதனின் மாண்பைப் பாதுகாக்கின்றது'' என்று விளக்குகின்றார். சங்கத் தந்தையரும் மனச் சுதந்திரம் பற்றிய அறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளனர். தனிமையிலும் பொதுவாகவும் ஒருவன் இறைவனை வழிபடுவதற்குத் தடைகள் இருத்தலாகாது.

## 7. பொருளாதர, அரசியல் உரிமைகள்

''பொருளாதாரத்துறையில் தம் விருப்பம்போல் தாமே தம் தொழிலைத் தொடங்கவும் செயல்படவும் மக்களுக்கு இயல்பான உரிமையுண்டு'' என்கின்றார் 23 ஆம் அருளப்ப பாப்பரசர். ஒருவனது உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுந்ததான சூள்நிலை உருவாக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதுபற்றி 12 ஆம் பத்திநாத பாப்பரசர் பின்வருமாறு கூறினர்: "தனது இயல்பின்படி உழைக்கக் கடமைப்பட்டவன். மனிதன் இதற்கேற்றாப்போல் எல்லோரும் தம் வாழ்வுக்காகவும் தம் பிள்ளைகளின் வாழ்வுக்காகவும் தேவையானவற்றைத் தம் உழைப்பிலிருந்து பெற இயல்பான உரிமைகொள்ளுகின்றார்கள்"

மனிதன் சமூகமாக வாழ்வதனுல் கூட்டங்கள் கூடவும் குழுக்கள் அமைக்கவும் உறவுகளை வளர்த்துக்கொள்ளவும் உரிமையுடையவன். இத்தகைய உரிமை தனிமனித சுதந்திரத்துக்கும் பொறுப்பிற்கும் இடையூருகாது என்கின்றது: 'அன்னையும் ஆசிரியையும்' சுற்றுமடல். ஒருவன் தன் தேவையை முன்னிட்டு பிறநாடுகளில் குடியேறலாம். மீண்டும் தாய் நாட்டுக்கு வரலாம். இதற்கு வீணுகத் தடைகள் விதிக்கலாகாது. இச்சமூக உரிமைகளோடு இணைந்தது அரசியல் உரிமை நாட்டின் பொதுவிடங்களிலும் பொதுநலனிலும் மக்கள் தம்மை ஈடுபடுத்தவேண்டும். மனித மகத்துவம் இதனை வேண்டிநிற்கின்றது. அத்துடன் தம் உரிமைகளைக் காத்துக்கொள்வதற்கு அரசின் பாதுகாப்பிலும் தங்கியுள்ளனர். நீதியின் அடிப்படையில் பாகுபாடற்றதும் பயனுள்ளதுமான பாதுகாப்பை அரசு அவர்களுக்கு வழங்கும்.

## 8. நீதியின் குரல்

உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் இவைகொண்ட சமூக வாழ்வை அமைப்பதற்கு இறைவன் மையமாக இருக்கின்ருர் அறநெறியும் துணைசெய்ய ஒழுங்கான ஆட்சி உண்மையின் அடித்தளத்தில் உருவாகின்றது. 'உலகில் நீதி' பற்றிய மறை ஆயர் மகாநாட்டின் வெளியீட்டில் முன்னேற்றுவதற்கு ஒருவருக்குள்ள உரிமை நீதியின் அடிப்படையில் காட்டப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் சோஷலிச நாடுகளிலும் பொருளாதார அமைப்பின் பரிணும வளர்ச்சி காரணமாக ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை ஒருவரின் உரிமைகளையும் சுயவெளிப்பாட்டையும் தூண்டிநிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியின் குரலாகக் கேட்கின்றது. முன்னேற்றுவதற்கான உரிமையின் மட்டில் சகலரிடையிலும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுசார்பாக முதலில் உள்ளங்கள் மாற வேண்டும். அன்பின் இலட்சியத்தை உணரவேண்டும். அவ்வாறு உணரத்தடையாயிருக்கும். சமூக அமைப்புக்கள் தடைகள் யாவும் நீக்கப்படவேண்டும்.

அபிவிருத்தியடைந்த வரும் நாடுகள் முன்னேற்றம் காண விடுதலை வேட்கையோடு செயற்பட ஆரம்பித்துவிட்டன. முன்னேறுவதற்கான உரிமை முன்னேறுவதற்கான நம்பிக்கையை வளர்த்துவிட்டது. இந்நம்பிக்கைக்கு நீதியின் பேரில் பதிலளிக்க வேண்டியது அவசியம் ஆகும். இவ்வாறு சமுதாயத்தில் நாம் உரிமையை வழங்கி நமது உரிமையைப் பெற்றுக் கொள்ளும்போது தனிப்பட்டோரதும் சமுதாயத்தினதும் நலன் பேணப்படும் என்பது உறுதி. ●

**மனிதன் மனிதனுக வாழவேண்டியவன்**
**அந்த உரிமையை மறுப்பதோ**
**அன்றேல் மறைப்பதோ**
**மனித காருண்ணியத்திற்கு முரணுனது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# உழைப்பின் உயர்வு

உழைக்கும் மக்களே உருவாக்கம் பெற்றவர்கள். மனித மாண்புடன் வாழுகின்ற மக்கள் தமது மகத்துவத்தை உணர்ந்த வகையில் செயற்படும்பொழுது உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழுவார்கள். ஒவ்வொரு மனிதனும் தனது சொந்தத் தேவைகளை, சமூகத் தேவைகளை, நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உழைத்து வாழவேண்டியவனுகின்றான். ஒவ்வொருவனும் தனது ஆற்றல் திறனையும் சமூகநலன் சக்தியையும் சமச்சீரான முறையில் பயன்படுத்துவதன் மூலம் உழைப்பின் சிறப்பினை உணரலாம்.

## 1. பழைய ஏற்பாட்டில்

பறவைகள் பறந்து தாமாய் இரையைத் தேடுவதுபோன்று மனிதனும் அன்றாடம் உழைத்து உண்பது இயற்கையின் நியதியாகும். ஆரம்பத்தில் இறைவன் உழைப்பை ஒரு தண்டனையாக மனிதன்மேல் சுமத்தவில்லை. மாறாக, மனிதன் தனது மாண்பினை வெளிப்படுத்துவதற்கு ஏற்புடைய ஊடகமாக உழைப்பினை மேற்கொள்ள வேண்டும் என்றே இறைவன் விரும்பினார்.

''நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள். கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும் பூமியின்மீது அசைந்து உலாவும் உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்'' (ஆதி. 1 : 27–28) என்று இறைவன் தனது படைத்தல் தொழிலின் பிரதிபலிப்பாகவும் பங்காளியாகவும் மனிதன் செயற்படவேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் படைத்தார். "சோம்பேறியே, எறும்பினிடம் போய் அதன் வழிகளைக் கணித்துப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்" என்று பழமொழி ஆகமம் சோம்பலை முறியடிக்கும்படி புத்திமதி கூறுகின்றது. மனிதன் தனது கையால் உழைத்து வாழ்வது மனிதத் தன்மைக்குக் கீழ்த்தரமானதல்ல. சவுல் மன்னன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு ஒரு விவசாயியாகவும் தாவீது அரசன் ஒரு மேய்ப்பனாகவும் இருந்ததை சாமுவேல் ஆகமம் எடுத்துரைக்கின்றது.

மனிதன் இறைவனுக்கு எதிராக அவரது கட்டளையை மீறியதன் விளைவாக உழைப்பு மனிதனுக்கு ஒருவித வேதனையையும் துன்பத்தையும் கொடுத்தாலும் உழைப்பு ஆதியிலிருந்தே கடவுளின் திட்டமாகக் கருதப்பட்டது. எனவே, மனிதன் உழைப்பில் ஈடுபட்டிருப்பதன் மூலம் இறைவனின் திட்டத்தையே நிறைவு செய்கின்றான். ஆனால் சுயநலத்தில் சிக்கப்பட்டு மனிதன் உழைப்பினை மேற்கொள்ளும் பொழுது அது அவனையும் ஏனையவரையும் அடிமைப்படுத்துகின்றது.

மனித பாவத்தின் காரணமாக உழைப்பு அடிமைப் படுத்தும் காரணியாக, சுரண்டலைத் தோற்றுவிக்கும் சாதனமாக மாற்றப்படும்பொழுது உழைப்பின் திருத்தன்மை மறுக்கப்படுகின்றது. சமுதாயத்துச் சலனங்களை எதிர்த்து இறைவாக்கினர் எரேமியாஸ் கூறுகின்றார்: "அநியாயமாய் தன் வீட்டையும் அக்கிரமமாய் தன் அறைகளையும் கட்டுகிறனுக்கு ஐயோ கேடு. அவன் தன் அயலானைக் கூலியின்றி உழைக்கச்செய்கின்றான்" (எரே. 32 : 13).

எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும் உலக போக்கினை எச்சரித்து, ஏழைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியான செயல்களைக் கண்டித்து இறைவாக்கினரான ஆமோஸ் கூறுகின்றார்: "நீங்கள் ஏழைகளை நசுக்கி, அவர்களிடம் தானியவரி வாங்கி, அதைக் கொண்டு செதுக்கிய கற்களால் வீடுகட்டினீர்கள். அந்த வீடுகளில் நீங்கள் வாழப் போவதில்லை".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தில் அடிமைகளாக்கப்பட்ட இஸ்ராயேலர் பலவந்தமாகஉழைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்றும் மனிதத்தன்மையற்ற முறையிலே அவர்கள் கொடூரமாய் அடிமை ஊழியமாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும் யாத்திரையாகமம் கூறுகின்றது. அடிமைத்தன உழைப்பினின்று இறைவனுகிய யாவே இஸ்ராயேலரை மீட்டருளினர் என்பதே பழைய ஏற்பாடு தரும் பொருள் பொதிந்த உண்மையாகும்.

## 2. புதிய ஏற்பாட்டில்

''படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்நாள்வரை படைப்புப் பொருள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். (உரோ. 8 : 21–22) என்கின்றார் புனித சின்னப்பர்.

விடுதலையை நோக்கிய நகர்வு, மனிதர்களும் படைப்பனைத்தும் இறைவனில் மாட்சிமைப்படுத்தப்படல் உழைப்பினுல் சாத்தியமாகின்றது.

இறைவன் நீதியுள்ளவராய் இருக்கின்றார் என்பதோடு அவர் அளவில்லாத இரக்கமுள்ளவராய் இருக்கின்றார் என்பதைப் புதிய ஏற்பாடு வலியுறுத்துகின்றது. எனவே, இறைவழி வாழவேண்டிய மனிதர்களும் சமூகநீதி சார்பாக உழைப்பிற்கு ஏற்ப ஊதியத்தை மறுத்தல், தொழில்சார் பேதங்களை வளர்த்தல், பிறர் உழைப்பில் வாழுதல், பொதுநலம் என்ற போர்வையில் தமது சொந்த வயிறுகளை நிரப்புதல் போன்ற செயற்பாடுகளை முறியடிக்க முயற்சி எடுப்பதோடு இரக்க சிந்தையுடையவர்களாய் வாழுதல் வேண்டும்.

''உங்களோடிருந்தபொழுது நாங்கள் சோம்பித் திரியவில்லை. யாரிடமும் நாங்கள் இலவசமாக உணவு கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. மாறாக உங்களுள் யாருக்கும் சுமையாயிராதபடி பிழைப்பிற்காக இராப்பகலாய் பாடுபட்டு உழைத்தோம்'' (2 தெச. 3 : 8) என்று புனித சின்னப்பர் உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து தான் செயற்பட்டதை தெசலோனிக்கேய மக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் அவர் ''நாங்கள் உங்களோடிருந்தபொழுது 'உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது' என்ற கட்டளை கொடுத்தோம். உங்களுள் சிலர் எவ்வேலையும் செய்யாமல் இங்கும் அங்கும் சோம்பித்திரிந்து பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகையோர் தங்கள் உணவுக்காக அமைதியாக உழைக்க வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் கட்டளையிட்டு அறிவுறுத்துகின்றோம்''. (2 தெச. 3 : 10-12) என்று உழைத்து வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உறவினருக்குப் பாரமாக, சமுதாயத்திற்குச் சுமையாக உருப்படியாக எதுவும் செய்யாது சோர்வுற்று, சோம்பித் திரிவது நியாயமற்றதாகும். உழைப்பின் மூலம் உயர்வடைவதும் உவப்படைவதும் மனித வாழ்வின் சிறப்பம்சமாகும்.

கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் மனிதனின் மீட்புக்காக உழைத்ததிலேயே செலவிடப்பட்டது. கிறிஸ்துவின் வாழ்க்கை இலட்சியம், அவரது பணி என்பன மனிதரது முழு முன்னேற்றம், மனித மீட்பு சார்ந்ததாகவே காணப்பட்டன. ''என்னை அனுப்பினவரின் விருப்பத்தின்படி நடந்து அவரின் வேலையைச் செய்து முடிப்பதே எனது உணவு'' (அரு. 4:34) என்று கிறிஸ்து தனது புதுமைகளினாலும் போதகத்தினாலும் இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவுசெய்கின்ற தனது பணியினை வெளிக்காட்டினார். கிறிஸ்து தனது மீட்புப் பணியினை சிலுவை மரணத்தின் மூலம் நிறைவு செய்கின்றார். ''நீர் எனக்கு செய்யக் கொடுத்த பணியைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மகிமைப்படுத்தினேன்'' (அரு. 7 : 14).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாலும் செயலாலும் வாழ்க்கை முறையினுலும் இறைவனை மகிமைப்படுத்தி வாழ்ந்த கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது உழைப்பினுல் இறைவனை மகிமைப்படுத்த வேண்டியவனுகின்ருன். அவன் தனது ஆற்றல்களை தியாகச் செறிவுடன் வளர்ப்பதன்மூலம், இறைமயமாக்கப்பட்ட சூழலில் உழைப்பின் நற்கனிகளைச் சுவைப்பதன்மூலம் அவன் மீட்புப் பணியில் பங்கேற்று கிறிஸ்துவோடு சேர்ந்து இறைவனை மகிமைப்படுத்துகின்ருன். இறைஇராட்சியத்தின் மகிமை தூய, நாணயமான உழைப்பின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

## 3. திருச்சபையும் தொழிலாளரும்

ஆரம்பத்திலிருந்தே திருச்சபை தொழிலாளர்மீது தனித்துவமான முறையில் அக்கறை காட்டி வந்துள்ளது. குறிப்பாக, நவீன காலத்தில் விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்றவற்றின் துரிதமான வளர்ச்சி காரணமாகத் தொழிலாளர் ஆன்மீகத்தில், இறைபக்தியில் தளர்வுற ஆரம்பித்த பொழுது திருச்சபை அவர்களை அன்போடும் அனுதாபத்தோடும் இறைப்பற்றில் வளர்க்க முனைந்தது. திருச்சபைப் பெருந் தலைவர்களாகிய திருத் தந்தையர்கள் தொழிலாளர் நலன் மனித முன்னேற்றம் சார்ந்த சுற்றுமடல்களை வெளியிட்டார்கள். அவற்றின் விபரம் பின்வருமாறு:

### 1. தொழிலாளரின் நிலைமை

இச்சுற்றுமடல் திருத்தந்தை 13ஆம் சிங்கராயரால் எழுதப்பட்டது. தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி அதிகாரபூர்வமாகத் திருச்சபை எடுத்துரைத்த முதற்போதனை இதுவேயாகும். தொழிலாளர்கள் அனைவர்க்கும் அவர்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்ப நீதியான ஊதியம் வழங்க வேண்டுமென இச்சுற்றுமடல் வலியுறுத்தியது. பொருளாதார உலகில் மையமாகவும் அதனை உருவாக்குபவனுகவும் மனிதன் கணிக்கப்படுகின்ருன் என்று கருத்து முன்வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 'சமூக ஒருங்கமைப்பு'

இச்சுற்றுமடல் திருத்தந்தை 11 ஆம் பத்திநாதரால் 'தொழிலாளரின் நிலைமை' சுற்றுமடலின் 40 ஆவது ஆண்டு நிறைவாக வெளியிடப்பட்டது. தொழிலாளர் தாம் வேலைசெய்யும் இடங்களில் நிர்வாகத்துறையில் தகுந்த பங்கு பெற உரிமை வேண்டும், தொழிலாளர் சங்கங்கள் ஒழுக்க நெறி அமைப்புக்கேற்பச் செயற்பட வேண்டுமெனவும் இச்சுற்று மடல் நினைவூட்டியது. சமூக பொருளாதார வாழ்வைப் பொறுத்தவரை கீழ்மட்டத்திலான குழுக்கள் தாமாகவே செய்யக்கூடுமானவற்றில் மேல்மட்டக் குழுக்கள் தலையிடாதிருத்தல்வேண்டும் (principle of subsidiarity) என்ற தத்துவம் இச்சுற்றுமடலில் காணப்பட்டது.

## 3. அன்னையும் ஆசிரியையும் (Mater et Magistra 1961)

திருத்தந்தை 23 ஆம் அருளப்பரால் வெளியிடப்பட்ட இச்சுற்றுமடல், தொழிலாளர் தாம் செய்யும் வேலையில் இயந்திரங்களைப்போலக் கருதப்படாமல் அவர்கள் முழு மனிதர்களாக மனித மாண்புடன் நடத்தப்படல் வேண்டும். அவர்களது ஆளுமை வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, குடும்பநலம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். விவசாயத்துறையில் ஈடுபட்டிருப்பவருக்குத் தனிப்பட்ட ஊக்கமும் உதவியும் அளிக்க அரசு முன்வரவேண்டும் போன்ற கருத்துக்களை முன்வைத்தது. இதன் முக்கிய கருத்து சமூகமயமாக்கல் (socialization) என்பதாகும். இவ்வுலகப் பொருள் நலன்களை எல்லா மனிதரும் பயன்பெறக்கூடிய வகையில் சமூக உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும். பொருள் நலன்கள் நீதியின் அடிப்படையில் எல்லா மக்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்,

## 2. 2 ஆம் வத்திக்கான் சங்க ஏடு (1962—1965)

2ஆம் வத்திக்கான் சங்க ஏட்டின் இன்றைய உலகில் திருச்சபை (gaudium et spes) உழைப்பின் மாண்பை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்கின்றது. சமூக மயமாக்கல்மூலம் மனித உறவுகள் சமூக அன்பின், நீதியின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றும் உலகை மாற்றியமைக்கும் பணியானது கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து பிறக்கும் ஒரு கடமை என்றும் வலியுறுத்தியது.

5. மக்களின் முன்னேற்றம் (Populorum Progressio – 1967)

திருத்தந்தை 6ம் சின்னப்பரால் தரப்பட்ட இச்சுற்றுமடல் ஏழை நாடுகள் தொடர்ந்து ஏழைநாடுகளாகவும் பணக்கார நாடுகள் இன்னும் அதிகம் செல்வம் படைத்தனவாகவும் வளர்கின்ற நிலை மாறி எல்லா மக்கள் இனமும் முன்னேற்றமடைய வழிசுள் வகுக்கப்பட வேண்டும் என்றும் தொழிலாளரின் மனித மாண்பிற்கு ஏற்ப அவர்களுடைய வேலைச் சூழ்நிலைகள், தொழில் அமைப்புகள் இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

6. மனித உழைப்பு (Laborem Exercens 1981)

இச் சுற்றுமடல் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரால் அருளப்பட்டது. மேலைநாட்டுத் தொழிற் பிரச்சினைகளையும் திருத்தந்தையரின் தாய்நாடாகிய போலாந்தின் தொழிற் பிரச்சனைகளையும் பின்னணியாகக் கொண்டமைந்தது. இதன் 1ம் பகுதி இன்றைய தொழில் துறையைப் பாதிக்கும் புது அரசியல் – பொருளாதாரக் கூறுகளை எடுத்துரைக்கின்றது. 2ம் பகுதி மனிதனும் தொழிலும் பற்றிப் பேசுகின்றது. முதலுக்கும் தொழிலுக்குமிடையே நிலவவேண்டிய நல்லுறவை 3ம் பகுதி விளக்குகின்றது. 4வது பகுதி தொழிலாளரின் உரிமைகளை விபரிக்கின்றது. இறுதிப் பகுதி உழைப்பின் ஆன்மீகக் கண்ணோட்டத்தைக் கூறுகின்றது.

எந்த ஒரு வேலையும் அதைச் செய்கின்ற ஆளாகிய மனிதனின் மாண்புகள் அடிப்படையிலேயே மதிப்பிடப்படவேண்டும் என்றும் மனிதன் தான் எந்த வகையான உழைப்பினுடையவும் குறிக்கோளாக இருக்க முடியும் என்றும் இச்சுற்றுமடல் பொதுவாகக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 கிறிஸ்தவ சுதந்திரம், விடுதலை பற்றிய அறிக்கை.
(Instructions of Christian Freedom and Liberation, 1986)

இவ்வறிக்கை உழைப்பு சார்பாக குறிப்பிடுகின்ற முக்கிய குறிப்புகள் பின்வருமாறு :

மனித ஆளுக்கும் உழைப்பிற்குமிடையே உள்ள தொடர்பு மிகவும் அடிப்படையானதும் ஆதாரமானதுமாகும். இத் தொடர்புதான் மனிதன் எதிர்கொள்ளும் சகல சமூக – அர சியல் பிரச்சனைகளுக்கான தீர்விற்கு நேரிய தாக்கத்தைக் கொடுக்க வல்லதாகும். நீதியான உழைப்புத் தொடர்புகளே ஒவ்வொரு தனியாளினதும் முழுமையான முன்னேற்றத்திற் குச் சாதகமான அரசியல் குழும அமைப்பிற்கு அவசியமா கும்.

தச்சுப் பட்டறையில் கைவேலை செய்வதில் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கிறிஸ்து செலவழித்தார் என்ற உண்மையின் அடிப்படையில் அவரது வாழ்க்கையை 'உழைப்பின் நற்செய்தி' (Gospel of work) என அழைக்க கலாம். இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் மனித உழைப்பின் மாண்பும் மதிப்பும் முதன்முதலில் நிர்ணயிக்கப்படுவது அவ்வுழைப்பு எவ்வகையைச் சார்ந்தது. என்ற அடிப்படையிலன்று, அவ்வுழைப்பைச் செய்கிறவன் மனிதன் ஆவான் என்ற அடிப்படையிலேயே ஆகும். எனவே உழைப்பின் மாண்பிற்குத் தோற்றுவாயாக இருப்பது அனைத் திற்கும் மேலாக அதன் ஆள்நிலை சார்ந்த அர்த்தமேயன்றி பொருண்மை சார்ந்த அர்த்தம் அல்ல. (Cf. John Paul II, Encyclical Laborem Exercens, 6 : A A S 73, 1981 p.p. 599 – 592)

முதலையும்விட ஊழியத்திற்கே முதலிடம் கொடுக்கவேண் டும். எனவே தமது சொந்த லாபத்தை முன்வைத்து செயற் படுவதைத் தவிர்த்து, தொழிலாளரின் நலம் கருதி முதலீட் டாளர் செயற்படவேண்டும். மனித, ஆள்ரீதியான, குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனுக்குந் தேவையானவற்றை நிறைவு செய்வது சமூக நீதியின் முக்கிய அம்சமாகும். இந்த வகையில் மூன்றும் மண்டல நாட்டு வறியவர்களின் எழுச்சிக்கான போராட்டமும் இன்று இன்றியமையாததாகும்.

ஈற்றில் கிறிஸ்தவ கண்ணோட்டத்தின்படி, மனித உழைப்பின் மகத்துவம், புனிதத்தன்மை பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பது முக்கியமானது. மனித உழைப்பை ஒரு வியாபாரப் பொருளாகக் கருதுவதும் கிறிஸ்தவ கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது. மனிதன் தனது மனிதத்துவத்தில் வளர்வதற்கு, இறைப் பிரதிபலிப்பில் உறுதிப்படுத்தப்படுவதற்கு உழைப்பு இன்றியமையாத காரணியாக விளங்குகின்றது.

---

உழைப்பின் மூலம் மனிதன் உயர்வடை
கின்றான்;
உன்னத நிலையை எய்துகின்றான்.
விடுதலை நோக்கிய நகர்வு
கெடுதலை விளைவியா உழைப்பினால்
சாத்தியமாகின்றது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியலில் மறுமலர்ச்சி

## 1. இறைவனின் குரல்

"திருச்சபையின் கட்டுக்கோப்புக்கொத்த வரலாற்றின் வளர்ச்சியிலே இறையியல் தங்கியுள்ளது" என்கின்றார் கிறிஸ்ரியன் டுக்கொக் (Christian Duquoc). இந்த வளர்ச்சியானது கடந்த சில ஆண்டுகளில் துரிதப்படுத்தப்பட்டு வருவதை அவதானித்த இறையியலாளர் கொண்கர் (Congar) "கடந்த 25 ஆண்டுகளில் இறையியல் மாறியுள்ளது" என்கின்றார்.

இறையியலானது காலத்தின் கோலத்தைக் கண்ணில் கொண்டதாய் மனித வரலாறு, விஞ்ஞான முன்னேற்றங்கள், சமுதாய மறுமலர்ச்சி நிகழ்வுகள், தனிமனித ஆளுமைவளர்ச்சி, அரசியல் அமைப்புகள் போன்றவற்றைப் பிரதிபலிப்பதாய் இறையியல் இன்று வளர்ந்து வருகின்றது. சமுதாயத்தில் நிலவுகின்ற ஏற்ற இறக்கங்கள், தனிமனிதன் எதிர்கொள்ளும் உடல், உளத் தாக்கங்கள், தொழிலாளி அனுபவிக்கின்ற முதலாளித்துவ சுமைகள் அரசியல் அதிகாரச் சுரண்டல்கள் போன்ற சிக்கல் வாய்ந்த காலகட்டங்களில் இறைவனின் குரலாக — நீதி, உண்மை அன்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஊடகமாக இறையியல், சிறப்பாக விடுதலை இறையியல் விளங்குகின்றது. அது அட்டூழியங்களுக்கு அழிவு உண்டு, உண்மை என்றும் பொய்ப்பதில்லை என்பதனை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இறையியல் ஞானமாகும்

திருச்சபையின் ஆரம்பகாலத்திலிருந்தே இறையியல் ஆன்மீக வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகவே விளங்கியது. அது ஆன்மீக வளர்ச்சியைச் சார்ந்ததாய் வேதாகமத்தின் உட்பொருளாய் சிறப்புற்றுக் காணப்பட்டது. இது உலக காரியங்களிலிருந்து விடுபட்டதாய் ஆன்மீக பூரணத்துவத்தை மட்டும் நாடுவதாய அமைந்தது. எனினும் கிரேக்க குருக்களின் உலக இறையியல் பற்றிய சிந்தனை தனித்துவ, ஆன்மீக பூரணத்துவ நோக்கத்திற்கு மேம்பட்டதாகவும், பரந்ததாகவும் காணப்பட்டது.

## 3. இறையியல் நியாயித்தல் அறிவாகும்

கி. பி. 12ம் நூற்றுண்டிலிருந்து இறையியல் ஒரு விஞ்ஞானமாக வளர ஆரம்பித்தது. "இறையியல் ஒரு விஞ்ஞானம் மட்டுமல்ல; இது மனிதனைக் கடவுளோடு இணைக்கும் அன்பிலிருந்து பிறக்கும் ஒரு ஞானமாகும்" என்று கூறுகின்றார் தோமஸ் அக்குவைனஸ் (Thomas Aquinas). விசுவாசத்தையும் காரணத்தையும் ஒன்றிணைக்கும் அறிவுசார் துறையாக இறையியல் விளங்குகின்றது என்பது தெளிவாகின்றது. கி.பி. 15ம் நூற்றுண்டிலிருந்து, குறிப்பாக திரிதெந்தின் சங்கத்தின் பின்னர் இறையியல் திருச்சபையின் ஆட்சிப்பீடத்தின் துணைத்துறையாக மட்டுப்படுத்தப்பட்டது, இதன் செயற்பாடுகள் பின்வருமாறு :

1. வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை வரைவிலக்கணம் செய்து, எடுத்துக்கூறி விளங்கப்படுத்துதல்

2. கோட்பாடுகளைப் பரிசிலனை செய்து பிழையானவற்றைப் நிராக்கரித்தலும் உண்மையானவற்றைப் பாதுகாத்தலும்.

3. வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை அதிகாரத்தோடு படிப்பித்தல் சுருங்கச் சொல்லின், இறையியல் ஆன்மீகத்தையும் நியாயித்தல் அறிவையும் ஒருங்கே கொண்டது. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியல் சிந்தனையின் இன்றியமையாத பண்புகளாகும். இரண்டும் ஒருங்கிணைந்து ஒன்றுக்கொன்று துணைபுரிந்து இறையியலை வளர்க்கவேண்டும்.

## 4. ஆன்மீகமும் உலகியலும்

கிறிஸ்தவ வாழ்வின் மையம் அன்பேயாகும். விசுவாசத்தின் விவிலியக் கருத்தாக இது தன்னிலிருந்து விடுபட்டதாய் இறைவனுக்குச் செய்யும் அர்ப்பணிப்பாகவும் அயலவரோடு செய்துகொள்ளும் உறவாகவும் நிறைவாகின்றது. விசுவாசம் என்பது அன்பினூடாக செயற்படுகின்றது என்கின்றார் புனித சின்னப்பர். விசுவாசத்தின் நலனும் நிறைவும் அன்பேயாகும். தன்னையே இறைவனுக்கும் அயலவருக்கும் கொடுத்தல் அன்பேயாகும். இதுவே வரலாற்றின் கிறிஸ்தவனின் செயற்றிறன் மிக்க பிரசன்னத்தில் அடிப்படை விவிலியத்தின்படி விசுவாசம் என்பது அன்புமூலம் மீட்பு வழங்குகின்ற இறைவனுக்கு மனிதனது முழுமையான பதிலளிப்பதாகும். விசுவாசத்தை விளங்குதல் என்பது உண்மைகளை உறுதிப்படுத்துவதல்ல. மாறாக, வபழ்க்கையை முன்னிட்டு அர்ப்பணித்தல் ஆகும்.

கிறிஸ்தவ ஆன்மீகமானது வரலாற்றின் பல கட்டங்களில் பல மாற்றங்களை அனுபவித்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. ஆரம்பக்கட்டத்தில் ஆன்மீக உலகியலோடு தொடர்பற்ற நிலையில் காணப்பட்டாலும் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் ஆன்மீகமானது தியானமும் செயற்பாடும் ஒன்றித்த நிலையில் வளர்ச்சியடையலாயிற்று. தியானமும் செயற்பாடும் இணையப்பெற்றதாய் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்ட துறவற சபைகள் ஆரப்பிக்கப்பட்டன. இந்த வளர்ச்சி இன்றைய காலகட்டத்தில் பொது மக்களின் ஆன்மீகத்திற்கான தேடுதலினாலும் கிறிஸ்தவமல்லாத மறைகளில் காணப்படும் மறைத்தன்மை, இறைப்பண்பு போன்றவற்றின் ஆய்வினாலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது என்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மனிதன் - உலகம் - இறைவன் இணைதல்

இன்னும் இன்று திருவழிபாட்டில் உளவியல் அம்சங்களுக்குக் கூடுதலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இறைவாக்கு உலகுக்கு வாக்குறுதியாகத் திகழ்கின்றது. ''இறைவன் மனிதனாகிய படியால் மனிதனே எல்லாவற்றுக்கும் அளவீடு'' என்கின்றார் கார்ள் பார்த் (Karl Barth). இது மனிதனது உலக செயற்பாடுகளுக்கு, மற்றவர்களோடு அவன் கொண்டுள்ள தொடர்புகளுக்கு புதுமெருகூட்டுகின்றது. உலகிற்கு அப்பாற்பட்ட சக்திகளை மட்டுமே ஆராய்ந்த இறையியலில் பெருமாற்றம் ஏற்பட்டு வருகின்றது. மனிதன் – உலகம் – இறைவன் மூன்றையும் தொடர்புபடுத்தி ஆராய்வதில் இறையியலில் திசைதிருப்பம் கண்டுள்ளது.

2ம் வத்திக்கான் சங்கம் திருச்சபை பற்றிய கருத்தை அதிகாரத்தின் திருச்சபையாக அல்லாது பணிசெய்கின்ற திருச்சபையாக வலியுறுத்துகின்றது. இக்கால மனிதரின் வறுமையிலும் துன்பத்திலும் ஏக்கத்திலும் கவலையிலும் திருச்சபை அக்கறையுடன் பங்குகொள்கின்றது. இன்றைய உலகில் புதிய நோக்கில் திருச்சபையின் பிரசன்னமும் செயற்பாடுகளும் இறையியல் சிந்தனைக்கு கருவூலமாக அமைகின்றன. ''பரிசுத்த ஆவியின் உதவியினால் இன்றைய பல்வேறுபட்ட பேச்சுமுறைகளைக் கேட்பதும் ஆராய்வதும் அவற்றிற்கு பொருள் விளக்கம் தருவதும் இறை வார்த்தையின் ஒளியில் அவைகளைப் பற்றித் தீர்ப்பிடுவதும் இறைமக்கள் அனைவரின் சிறப்பாக மேய்ப்பர்கள், இறையியலாளர் ஆகியோரின் கடமையாகும்'' (இன். உல. திருச்சபை 44).

## 6. இறையியலில் மெய்யியல் தாக்கங்கள்

மெய்யியல் ரீதியான தாக்கங்களும் இறையியலில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. விஞ்ஞானம், தொழில்நுட்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றம் காரணமாக இக்காலத்தின் மெய்யியல் அம்சங்கள் மனிதன் இயற்கையோடு கொண்ட புதிய உறவினால் ஊட்டம் பெறுகின்றன. கி. பி. 19ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் மார்க்ஷியம் இறையியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது, தனிமனிதன் சமுதாயத்து இடர்பாடுகளினால் முதலாளித்துவ ஆதிக்கத்தினால் பாமர மக்கள் அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த வேளை மறையானது அவர்களுக்கு விடுதலை வாழ்வு வழங்கத் தவறிவிட்டது. இந்நிலையில் கார்ள் மாக்ஸ் (Karl Marx) மறைகளின் குருட்டாட்டத்தைக் கண்டித்து, "மதம் மனிதனை மயக்கும் மது" என்று வர்ணித்தார். இவ்வுலகில் நிம்மதியிழந்து கவலைக் கடலில் மூழ்கிக் கிடந்த ஏழைகளுக்கு மறு உலகில் நிம்மதி கிடைக்கும் என்று மதம் பாசாங்கு செய்து அநியாயங்களையும் அட்டூழியங்களையும் எதிர்த்து வாழாமல் ஏற்று வாழவேண்டும் என்று போதித்து, அநீதிகளை, ஊழல்களை உள்ளவாறே பேணிப் பாதுகாத்து வருகின்ற மத சமூக நிறுவனங்களை வன்மையாக கண்டித்தார் கார்ள் மாக்ஸ்.

கார்ள் மாக்ஸினதும் ஏனைய சில மெய்யியலாளர்களினதும் சவாலானது இறையியல் சிந்தனையின் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவிட்டது என்றே கூறவேண்டும் தார்மீக சமுதாயம் தளிர்விட இது வித்திட்டது. உறங்கிக்கிடந்த உண்மை விழிப்படைந்தது. தூங்கிக்கிடந்த சமுதாயம் துணிவு பெற்றது. எதிர்காலம் பற்றிய சிந்தனைகளும் எதிர்காலத்தை சிறப்பிக்க வேண்டும் என்ற கருத்துக்களும் இடம்பெற்றன. நூற்றுண்டுகளாக உண்மைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதிலே திருச்சபை கண்ணும் கருத்துமாயிருந்தது. நிகழ்கால, எதிர்கால உலகினை எவ்விதம் மேம்படுத்தலாம் என்பதில் திருச்சபை எவ்வித கரிசனையும் காட்டவில்லை. என்று வருந்துகிறார் ஸ்கிலெபெக் (Schillebeecke) பாரம்பரியத்தை கட்டிக்காத்தல் மட்டும்போதாது கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படும் நடைமுறைப் பிரச்சினைகளை, மனித செயற்பாடுகளை, சமூகத்தாக்கங்களை பிரதிபலிப்பதாக இறைஇயல் வளரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நவீன உலகத்தின் நியாயமான கேள்விகளுக்கு தகுந்த பதிலைத் திருச்சபை அளிக்கவேண்டுமாயின் இறையியல் பாங் கான பங்குசார் அறிவாராய்ச்சியியல் உருவாக்கப்பட வேண் டும். பாரம்பரியத்தையும் திருவெளிப்பாட்டையும் அடித்தளங் களாக கொண்ட பாரம்பரிய இறையியல் மாற்றப்பட்டு உலக சம்பவங்களை மனித வரலாற்றின் நடைமுறை உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட இறையியல் தேவை'' என்கிறார் கொண்கர். எனவே, இறையியல் நவீனப்படுத்தப்படவேண் டும். இன்றைய காலத்திற்கேற்றதாய், இன்றைய மனி தனின் ஏக்கங்களுக்கு, சமுதாய தாக்கங்களுக்குப் பதில் அளிப்பதாய் திருவெளிப்பாட்டின் ஒளியிலே தற்கால சம்ப வங்களுக்கு விளக்கம் தருவதாய் இறையியல் அமையும் போது அது விடுதலை அன்பை வளர்ப்பதாய் புதிய நீதியான சமத்துவமான சகோதரத்துவம் மிக்க சமுதாயத்தை இறை அரசின் நன்கொடையாக உருவாக்குவதாய் காணப்படும் என்பது வெள்ளிடைமலை.

---

**மனிதன் - சமூகம் - இறைவன் ஆகிய மூன்றினையும் தொடர்புபடுத்திய நிலையில் இறையியல் வளர ஆரம்பித்தது அன்றாட சம்பவங்கள், சமகால வரலாற்று நிகழ்வுகள் திருவெளிப்பாட்டின் ஒளியிலே வியாக்கி யானம் செய்யப்பட்டன.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# விடுதலை இறையியலின் வரலாறு

## 1. அடக்கப்பட்டவர்களின் கற்கை நெறி

ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வறுமை புறக்கணிப்பு போன்றவற்றினால் பாதிப்படைந்த இலத்தீன் அமெரிக்காவை மையமாகக் கொண்டே விடுதலை இறையியல் ஆரம்பித்தது. அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள் தான் விடுதலையை ஆரம்பிக்கவேண்டியவர்கள் என்ற ரீதியில் இலத்தீன் அமெரிக்கா சார்பான விடுதலை இறையியலை அடக்கப்பட்டவர்களின் கற்கை நெறியாக பாவுலோ பெறெயிறே (Paulo Freire) அளித்தது மக்கள் முன்னேற்றத்தைப் பொறுத்தவரை பெரும் பயனைக் கொடுத்தது. பெறெயிறே யின் உணர்வாக்குதல் (conscientization) ஒடுக்கப்பட்டு, அடக்கப் பட்டு, சுரண்டப்பட்டு வாழ்ந்தவர்களை விடுதலைக்கு இட்டுச் செல்வதாக அமைந்தது. அதாவது, ஏதாவதொரு வகையில் அடிமைத் தனத்தில் அகப்பட்டிருப்பவர்கள் புதியதொரு சமு தாயத்தை அமைப்பதற்கு தம்மை அர்ப்பணிப்பதன்மூலம் தனி மனிதனில் உணர்வாக்குதலை மேற்கொள்ளல், தூங்கு நிலையி லிருந்து மீண்டும் விழிப்புணர்வு பெற்ற நிலைக்கு வருதல் விடுதலைக்கு இன்றியமையாதது.

கி. பி. 18ம், 19ம் நூற்றுண்டுகளில் இலத்தீன் அமெ ரிக்க திருச்சபையானது சமுதாய ஈடுபாடுகளில், மறுமலர்ச் சிச் செயற்பாடுகளில் பின் தங்கியதாக, கிறிஸ்தவத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்களிலிருந்து கத்தோலிக்க விக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசத்தைக் கட்டிக் காக்கின்ற ஒன்றாக விளங்கியது. அத்தோடு இலத்தீன் அமெரிக்க திருச்சபையானது பொருளாதாரத்தில் வலிமைமிக்க குழுக்களோடு ஒன்றிணைந்து செயற்பட்டதோடு அடிமைப்படுத்துகின்ற, ஆதிக்கம் செலுத்துகின்ற தீயசக்திகளை எதிர்த்து வெற்றிகொள்ளத் தவறிவிட்டது. இச்சூழ்நிலையில் ஒடுக்கப்பட்டவருக்கு உரிமைவாழ்வு வழங்கவந்த கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களின் மனத்தில் புகட்டி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முனைந்தார் பெறெயிரே.

## 2. பாவத்தின் சூழல்

இலத்தீன் அமெரிக்காவில் நிலவிவந்த வறுமையையும் சுரண்டல்களையும் கொண்ட அநீதியின் சூழலை நிறுவனமாக அமைக்கப்பட்ட வன்செயல் என்று ஆயர்கூட்டத்தினர் வர்ணித்தார்கள். சுரண்டுபவர்களின் அநீதியான வன்செயலையும் சுரண்டப்படுபவர்களின் நீதியான வன்செயலையும் சமப்படுத்தலைத் தவிர்க்க வேண்டும் என்று இலத்தீன் அமெரிக்கக் குருமார் கேட்டுக்கொண்டார்கள். அநீதியும் அக்கிரமமும் ஆட்சிபுரியும் இச்சூழல் ''பாவத்தின் சூழல்'' என்றே அழைக்கப்படவேண்டும். ஏனெனில், சமூக அமைதி இல்லாமல் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வேற்றுமைபாடுகள், பாகுபாடுகள் காணப்படின் அது இறைவனை இறைசமாதானத்தை நிராகரிக்கின்ற நிலைமையினையே எடுத்துக் காட்டும். இதனை மனதிற்கொண்டு சக்திவாய்ந்த, முக்கியமான குருக்கள் கூட்டம் ஒன்று பின்வரும் அறிக்கையை வெளியிட்டது.

''பிழைப்பு வேதனங்கள், சுரண்டல், பட்டினி ஆகியவற்றை பாவத்தினதும் தீமையினதும் வெளிக்காட்டல்களாகக் கண்டிப்பது எமது கடமையும் உரிமையுமாகும்.''

## 3. புனிதம் - புது உணர்வு

''மனிதர்கள் முழுமையாக மனிதர்களாக இல்லாதபோது அவர்கள் இறைவனுடைய மக்களாக இருக்கமுடியாது. மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபிமானமற்ற சூழ்நிலைகளில் புனிதம் வெளிப்பட முடியாது'' என்றார் ஏர்னெஸ்டோ கார்டெனல்.

இந்த ரீதியில் இலத்தீன் அமெரிக்கத் திருச்சபையானது ஆயர்களினதும் முற்போக்குவாதக் குருக்களினதும் அயராத உழைப்பினால் மறுமலர்ச்சியடைய ஆரம்பித்தது. மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகொடுக்காத முதலாளித்துவ அமைப்பினை முற்றாக விட்டுவிட்டு மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதிலிருந்து விடுதலை பெற்றுக்கொடுக்கக்கூடிய சோஷலிச அமைப்பினைக் கட்டி எழுப்புவதில் மக்கள் தீவிரமானார்கள். அநீதியை, அக்கிரமங்களை வளர்க்கின்ற எந்த அமைப்பினையும் எதிர்க்க மக்கள் ஆயத்தமானார்கள். சமதர்ம, சமத்துவ, நீதியான சமுதாயத்தை நிறுவுவதற்கு ஏற்பாய் விழிப்புணர்ச்சி இறைவாக்கு எதிரொலித்தது. எகிப்தியரின் அடிமைத்தனத்தினின்று மக்களை மீட்டு விடுதலை வாழ்வு பெற்றுக்கொடுத்த இறைவன் இலத்தீன் அமெரிக்க நாட்டு மக்களுக்கு விடுதலை வாழ்வு பெற்றுக்கொடுப்பார் என்ற நம்பிக்கையில் அவர்கள் புது உணர்வோடு ஒரு புதுயுகம் படைக்க முற்பட்டார்கள்.

## 4. ஏழ்மையின் ஏற்றம்.

இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் சங்கம் 1968 இல் கொலம்பியா நாட்டிலுள்ள மெதயீன் நகரில் கூடி இலத்தீன் அமெரிக்காவில் நிலவிய அரசு அடக்குமுறை, பிறநாடுகளைச் சார்ந்திருத்தல் போன்ற அடிப்படைப்பிரச்சினைகளை ஆராய்ந்து, தீர்வாக விடுதலை, தன்னுரிமை, தன்னாட்சி போன்ற கருத்துக்களை முன்வைத்தது. 'நீதி' 'அமைதி' 'திருச்சபையின் ஏழ்மை' என்ற மூவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்தது.

இலத்தீன் அமெரிக்க ஆயர்களின் மூன்றும் பேரவை 1979 ஆம் ஆண்டு மெக்சிக்கோ நாட்டிலுள்ள புவெப்லா (puebla) நகரில் நடைபெற்றது. திருச்சபை ஏழைகள் மட்டில் சிறப்பான அக்கறை' (preferential option for the poor) காட்டவேண்டுமென இப்பேரவை வலியுறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்காரத் திருச்சபை என்ற போர்வையைக் கழற்றி விட்டு ஏழ்மைத் திருச்சபையாகத் திருச்சபை மாறுதலின் மூலமாக, ஏழைகளோடு ஒன்றித்து நிறைவில்லாத அமைப்புகளைத் திருத்துவதன் மூலமாக விடுதலைப் பயணத்தைத் திருச்சபை மேற்கொள்ளவேண்டும் என்பது தெளிவாகியது.

இலத்தீன் அமெரிக்காவைப் போன்று இன்று மூன்றும் மண்டல உலகநாடுகள் வறுமையை, அநீதியை அனுபவித்து வருகின்றன. வறுமையை நிலைநாட்டி வரும் சமூக அமைப்பினை எதிர்த்து, அநீதிக்கு உருவம் கொடுக்கும் அரசியல் அமைப்பினை எதிர்த்து இந்நாடுகளில் புரட்சிகள் தொடருகின்றன. குறிப்பாக எமது நாட்டினில் சகல அகிம்சை முறைகளையும் பரிசீலனை செய்து தோல்வி கண்டபின்னர் எம்மவரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைப் போராட்டம் நியாயமானது என்றே கூறவேண்டும். ●

---

மனிதன் இறைவனாக மாற முயலக்கூடாது.
அது இயலாமை.
மனிதன் மிருகமாக மாற முயலக்கூடாது.
அது இகழ்வாற்றல்
மனிதன் மனிதனாக வாழவேண்டும்.
அது இறவாமை
புனிதத்துவத்தின் அடிப்படை மனிதத்துவம் ஆகும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# விடுதலையும் மனித முன்னேற்றமும்

இன்று உலகு விரைவான, சிறப்பான சமூக - கலாச்சார மாற்றத்தை அனுபவித்து வருகின்றது. மாற்றங்கள் சடுதியானதாய் சீரற்ற வேகத்தில் நாட்டுக்கு நாடு இடத்துக்கு இடம் வேறுபட்டு வருகின்றது. சமச்சீரற்ற மாற்றங்களையும் பொருளாதாரக் காரணிகளையும் காணுகின்ற இன்றைய மனிதன் சுதந்திரம் மனித மாண்பு, தன்னிறைவு போன்றவற்றை பூர்த்திசெய்யும் ஆவலோடு செயற்பட வேண்டியவனாகின்றான்.

## 1. முன்னேற்றம் என்ற பதம் :

முதலாளித்துவம் என்பது ஒரு சுற்றுவட்டமாக அமைப்பு ரீதியான மாற்றத்தினால் பாதிக்கப்படாத ஒன்று. இது ஒரு புதிய சக்தியினால் உடைக்கப்பட முடியும். தொழில் நுட்ப-பொருளாதார, அரசியல் — சமூக கண்டுபிடிப்புகள் பழைய அமைப்பினை உடைத்தெறிகின்ற நிலைமையினை முன்னேற்றம்'' என்கிறார் ஸ்கம்பெற்றர் (Schumpetr). முன்னேற்றமானது பொருளாதார வளர்ச்சியிலிருந்து வேறுபட்டது. பொதுவாக பொருளாதார, சமூக அரசியல், கலாச்சார அம்சங்களை உள்ளடக்கிய முழுவாரியான சமூக தொடர்பாற்றலே முன்னேற்றமாகும். செல்வந்த நாடுகள் தொடர்ந்து செல்வத்தில் மிதத்தலும் வறிய நாடுகள் தொடர்ந்து வறுமையில் ''வாடுதலும் முறியடிக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மனிதனே தனது இலக்கின் அமைப்பாளன்

நவீன மனிதனின் முதல் தேவை சமூகம், இனம், நாடு வகுப்பு போன்றவற்றின் வெளிவாரியான தாக்கங்களிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமல்ல, உள்வாரியான விடுதலையைப் பெறவேண்டும் என்பதுமேயாகும். அதாவது அவன் சமூக அமைப்பு ரீதியான விடுதலையோடு உளவியல் ரீதியான விடுதலையையும் எதிர்பார்க்கின்முன். ''சமுதாய விடுதலையையும் தனிமனித விடுதலையையும் ஒன்றிணைக்காததே கடந்தகால புரட்சிகளின் தோல்விக்குக் காரணமாகும். பேரின சமூக சிற்றின சமூக சக்திகள் ஒன்றிணையும்போதே, உள்ளகம், வெளியகம் இணைந்த நிலையிலேயே புதுயுகம் புரட்சி பொருள் உள்ளதாயமையும்'' — என்கிறுர் டேவிற் கூப்பர் (David Cooper).

இறைவனால் அளிக்கப்பட்ட மனித வாழ்க்கையை மேம் படுத்துவது, முன்னேற்றுவிப்பது, உயர்ந்தோராக வாழ முய லுவது ஒவ்வொரு மனிதனதும் கடமையும் உரிமையுமாகும்.

''வாழ வேண்டும், வளர வேண்டும், உயர்வு வேண்டும் உற்சாகம் வேண்டும்'' என்ற மனித உந்துகை இயல்பானது இவ்வுந்துகை வாழுவித்தல், வளருவித்தல், உயர்வு கொடுத் தல், உற்சாகமூட்டுதல் போன்ற செயற்பாட்டினுல் உரம் பெறும்,

## 3. தொடர்ச்சியான முயற்சி

இடைவிடாது இன்னல்கள் தொடர்ந்தாலும் இவற்றை முறியடிக்கத் துணிச்சலோடு முயற்சி எடுத்தால் முன்னேற் றம் நிட்சயம். 'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என் பது ஒரு முதுமொழியாகும். தோல்வியைக் கண்டு மனம் சோர்வுருது, எதிர்த்தாக்கங்களைக் கண்டு மனம் சஞ்சலிக்காது ஏமாற்றங்களைக் கண்டு மனம் விரக்தியுருது வாழ்வினை எதிர் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனை அவனது தொழில் காரணமாக 'தாழ்த்தப்பட்டவன்' என ஒதுக்கி வைப்பது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகும். மனித மாண்பற்ற செயற்பாடாகும். எத்தொழிலைச் செய்பவனும் அத்தொழிலின் மூலம் நிறைவு பெறுகின்றான்; நிரந்தர உழைப்பாளியான இறைவனோடு தொடர்பு கொள்கின்றான்.

"நம் நாட்டில் நிலவும் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கண்டு நான் உண்மையில் பலமுறை அழுததுண்டு. நமது அலட்சிய மனப்பான்மையும் அறியாமையும் தான் இதற்கு முக்கிய காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். உழைப்பின் மாண்பினை நாம் இன்னும் உணரவில்லை. இதனால்தான் செருப்புத் தைக்கும் ஒருவர், அதைத் தவிர வேறெந்த வேலையையும் செய்யமாட்டார். ஏனெனில் மற்ற வேலைகளெல்லாம் தன் கௌரவத்திற்குக் கீழ்ப்பட்டவை என அவர் கருதுகிறார். இந்தத் தவறான மனப்பாங்கு மறைந்தொழிய வேண்டும்" என்கின்றார் காந்தியடிகள்.

## 4. பகுதிவாரியான முன்னேற்றம்

23 ஆம் அருளப்ப பாப்பரசரின் 'அன்னையும் ஆசிரியையும்', அவனியில் அமைதி சுற்றுமடல்கள் 2ஆம் வத்திக்கான் சங்கஏட்டின் இன்றைய உலகின் திருச்சபை' போன்றவை மனித முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. சமுதாயத்தினில், நாட்டினில் பரவலாக நிலவுகின்ற அநீதிகள் அகற்றப்பட்டு மக்கள் பணிசார்பான பொருளாதார முன்னேற்றத்தை இவை உறுதிப்படுத்துகின்றன. 6 ஆம் சின்னப்ப பாப்பரசரின் மக்கள் முன்னேற்றம் சுற்றுமடல் மனித முன்னேற்றத்தை மையமாகக்கொண்டு மனிதன் முழு முன்னேற்றம் பெறவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. மொழி, மதம், இனம் என்ற பாரபட்சம் எதுவுமின்றி எல்லோரும் முழு மனிதர்களாக வாழும் உயர்நிலையினை, மனிதனின் முழுமையான விடுதலையை இச்சுற்றுமடல் வெளிப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனித குலத்தின் உண்மையான முழுமையான விடுதலை மனிதனின் முயற்சியால் மட்டுமே கிட்டுமென்று எதிர்பார்க்கின்றனர் சிலர் அவனியின்மேல் மனிதன் இனி செலுத்தப் போகும் ஆட்சி அவனுள்ளத்தின் எண்ண ஆவல்களையும் நிறைவேற்றிவிடும் என்பது இவர்களது உறுதி" (இன். உல 10) இந்தவகையில் முழுமையாகவே பொருளாதார, சமுதாய நிலையில் விடுதலையைக் கண்ணோட்டமிடுகின்றனர். இன்றைய கடவுள் மறுப்புக்கொள்கையின் பல வடிவங்களிலொன்று பொருளாதார, சமூக விடுதலையின் வழியாக மனிதனை விடுவிக்க எண்ணுகின்றது. எனவே விடுதலை விரிவாக்கப்படுதல் அல்லது விடுதலையை பரந்த நோக்கில் அணுகுதல் அவசியமாகிறது.

## 5. தூய முழுமையான விடுதலையே தேவை

"தாங்களே தங்களது சமூகத்தின் பண்பாட்டிற்குக் காரணமும் அதன் சிறப்புக்களுமென்பதை உணரும் ஆண், பெண்களின் எண்ணிக்கை ஒவ்வொரு குழுவிலும் நாட்டிலும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. உலகமெங்கும் தன்னாட்சி உரிமை உணர்வும் கடமை உணர்வும் மேன்மேலும் வளர்ந்து வருகின்றன. மனிதகுலம் முழுவதின் ஆன்மீக, ஒழுக்க முதிர்ச்சிக்கு இவ்வுணர்கள் மிகவும் முக்கியமானவையாகும். உலக ஒருமைப்பாட்டையும் உண்மை, நீதி இவற்றை அடிப்படையாகக் கொண்ட உயர்ந்ததோர் உலகை உருவாக்க நம் மீது சுமத்தப்பெறும் கடமையையும் நம் கண்முன் கொண்டோமென்றால் இந்த உண்மை இன்னும் மிகத் தெளிவாகும். இவ்வாறு ஒரு புது மனித நல கோட்பாட்டின் பிறப்பிற்கு நாம் சாட்சிகளாகத் திகழ்கின்றோம். இக் கோட்பாட்டின்படி மனிதன் என்பவன் தன் சகோதரர்களிடமும் வரலாற்றிடமும் கொண்டுள்ள பொறுப்பிலிருந்து தான் அறியப்படுவான்" (இன். உல. 55). இறையருளின் உதவியோடு புதுமனித குலத்தை உருவாக்க பலர் முயற்சி செய்கின்றனர். உலகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள அனைத்தையும் பயன்படுத்தி மனித மாண்பு மிளிர் கின்ற முழுமையான சுதந்திரம் மிக்க ஒரு வாழ்வுபெற முற் படுகின்றனர்.

## 6. விடுதலை ஓர் உறவு

''கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வு எமக்கு அளித்தார். அதிலே நிலைத்திருங் கள்; அடிமைத்தனத்தின் நுகத்தைத் திரும்பவும் ஏற்றுக் கொள்ளாதீர்கள்'' (கலா. 5:1). பாவத்திலிருந்து நாம் விடு தலை பெறவேண்டும்; தன்னல செயற்பாடுகளிலிருந்து விடு தலை பெறவேண்டும் என்பதனையே புனித சின்னப்பர் விளக்கு கின்றார். பாவம் என்பது கடவுளோடும் மற்ற மனிதர்க ளோடும் கொள்ளும் உறவின் முறிவாகும். வறுமை, அநீதி, சுரண்டல் போன்றவற்றிக்குக் காரணமான பாவம் கடவுளை யும், மனிதனையும் புறக்கணிக்கும் ஒரு தூண்டுகோலாக அமைகின்றது. எனவே சுதந்திரமாக நாம் அன்பு செய்வதற் காக எம்மை விடுவித்துள்ளார்.

''விவிலிய மொழியில் தனக்காக அன்றி மற்றவர்களுக்காக உள்ளதே விடுதலை. அது சேகரிப்போ, பிரசன்னமோ பொருளோ அல்லது வேறு எதுவோ அல்ல. பாருக அது ஓர் உறவு. இரு ஆட்களுக்கு இடையிலான உறவே விடுதலை. விடுதலையாக இருப்பதன் அர்த்தம் மற்றவர்களுக்காக விடுத லையாக இருப்பதே மற்றவனோடு உறவு கொண்டிருக்கின்றேன் என்பதே எனது விடுதலையாகும்'' என்கின்றார் பொன் கொபர் (Bonhoeffer) விடுதலை வாழ்வு என்பது தன்னலத்தில் வளர்ந்துவரும் சகல அமைப்புக்களிலிருந்தும் எம்மை விடுத லையாக்குவதேயாகும். விடுதலையின் வித்து மற்றவர்களைத் திறந்த உள்ளத்தோடு அணுகுவதேயாகும். விடுதலையின் முழுமை கிறிஸ்துவிடம் இருந்துவரும் ஒரு அருட்கொடையாக இறைவனோடு ஏனைய மனிதர்கள் கொள்ளும் கூட்டுறவாக நிறைவுபெறுகின்றது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியின் தொடர்ச்சியே
முழுமையான முன்னேற்றமாகும்.
அங்கே,
அருள் இருக்கும், பொருள் இருக்கும்,
அன்பு இருக்கும், பண்பு இருக்கும்;
அனைவருக்கும் வாழ்வு நல்கும்
உறவு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# விடுதலை வீரன் கிறிஸ்து

உலகில் நீதியற்ற சூழல் நிலவுகின்றது என்றால் அதற்குக் காரணம் மனிதர்களின் பொறுப்பற்ற தன்மையேயாகும். பாவம் நிறைந்த சூழல் என்பது இறைவனை நிராகரிப்பதேயாகும். பரமனைத் துறந்து, பாசத்தை மறந்து, பாவத்தின் விஷத்திற்கு பலியான மனிதனை பணிவுடன் மீட்க இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ராயேலில் தோன்றினார். இயலாமை, புரியாமை, அறியாமை போன்ற அனைத்திலிருந்தும் விடுதலை அளிக்கும் வீரனாக, தளைகளை நீக்கிடும் தலைவனாகத் திகழ்ந்தார் கிறிஸ்து.

நட்பின், சகோதரத்துவத்தின், மனிதர் மத்தியிலே இருக்கவேண்டிய அன்புறவின், இறைவனோடு கொள்ள வேண்டிய தொடர்பின் முறிவே பாவமாகும். அடிமைத்தனத்தை அங்கீகரிக்கின்ற அமைப்புக்கள், மத, இன, மொழி அடிப்படையில் பாகுபாடுகளை வளர்க்கின்ற சமூக நிறுவனங்கள் பாவத்தையே வெளிப்படுத்துகின்றன. அநீதியாக ஆதிக்கம் செலுத்துகின்ற சூழலின் மூலகாரணியாக, அந்நியமாதலின் அடிப்படையாக பாவம் விளங்குகின்றது. பாவமானது அடிப்படையான விடுதலையை, சமதர்ம அரசியல் திட்டத்தினின்று செயற்படும் விடுதலையை வேண்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. கிறிஸ்துவே விடுதலையின் ஆதாரம்

இந்த அடிப்படை விடுதலை கிறிஸ்து எமக்கு அளிக்கும் அருட்கொடையே ஆகும். சகல பாவங்களிலிருந்தும் அவற்றின் விளைவுகளிலிருந்தும் விடுதலை தரவல்லவர் கிறிஸ்துவே. ''அவர்தம் திருவுள விருப்பத்திற்கேற்ப, தம் அன்பு மகனுக்குள் நமக்கருளிய அருளின் மாட்சிமை புகழ் பெற்று விளங்க இயேசுக்கிறிஸ்து வழியாகவே நம்மைத் தம் பிள்ளைகளாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறி வைத்தார். இந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய், இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்பு அடைகிறோம்'' (எபே. 1/5–7).

''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்,
குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும்
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைவாழ்வு வழங்கவும்,
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும்,
அவர் என்னை அனுப்பினார்'' (லூக். 4/18–19)

என்று இறைவாக்கினரான இசையாஸ் மீட்பரைக் குறித்து முன்னறிவித்த வார்த்தைகள் இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக நிறைவு பெற்றது. இந்நிலையில் பாவ தோஷத்தில் வாழ்ந்த மனிதரை மீட்கும் உன்னதராகத் தோன்றினார் இயேசு. சமுதாயத்தின் அடிமட்டத்திலிருக்கும் அடிமை வாழ்வு வாழும் எளியோர், இடையர் பாவிகள் ஆயக்காரர் புறஇனத்தார் போன்றோரோடு தம்மையே ஐக்கியப்படுத்திய விடுதலைவாழ்வு பெற்றுக்கொடுத்தார். ஆட்களின் அந்தரங்கங்களையும் உள் மனதையும் உணர்ந்தவராய் அவர்களது இன்பதுன்பங்களில் பங்கு கொண்டவராய் விடுதலையின் நற்செய்தியை வியப்புடன் எடுத்தியம்பினார்.

இரட்சணியம், மீட்பு, சுதந்திரம், கட்டறுத்தல் ஆகிய கருத்துக்களைக்கொண்ட விடுதலை என்ற பதம் பின்வரும் மூன்று நிலைகளில் நோக்கப்படலாம்:–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரசியல் விடுதலை—வரலாற்றினில் மனித விடுதலை.

2. பாவத்தினின்று விடுதலை

3. இறைவனோடு ஒன்றித்தல்.

இவை மூன்றும் இணைந்த நிலையில் விடுதலை ஒரு தொடர் கதையாக வளர்கின்றது. அநீதிகள், அட்டூழியங்கள் இல்லாத இறை இராட்சியம் பலப்படுத்தப்படுகின்றது. நீதியான சமுதாயத்தின் புதிய மனிதனின் உருவாக்கல் இறை இராட்சியத்தின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. இது கிறிஸ்துவின் அருட்கொடையை ஏற்றுக்கொள்வதன் மூலம் சாதகமாகின்றது. இவ்வகையில் அடக்கப்படுதல், ஒடுக்கப்படுதல், சுரண்டப்படுதல், சுமத்தப்படுத்தல் ஆகியவற்றிலிருந்து விடுதலைபெற மேற்கொள்ளும் போராட்டங்கள் எல்லாம் தன்னலத்தை, அன்பின்மையை இல்லாமல் செய்யும் முயற்சிகளேயாகும். எனவே, நீதியான சமுதாயத்தை நிருமாணிக்க மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும் விடுதலைப்பாங்கானது என்றே கூற வேண்டும்.

## 2. இஸ்ராயேலருக்கு விடுதலை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆண்டவராகிய மெசியாவை இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்தார்கள். அரசியல் விடுதலையை அவர் பெற்றுத் தருவார் என எதிர்பார்த்தார்கள். எகிப்திய அடிமைத்தனம், பாபிலோனிய அடிமை வாழ்வு, ஆசீரியத் தலை இவற்றிலிருந்து இறைவனின் மூலம் விடுதலை பெற இஸ்ராயேலர் உரோமையரின் ஆட்சிக் கட்டுக்களிலிருந்து மீட்படைய மெசியாவை எதிர்பார்த்தார்கள். இறைவாக்கினரும் இந்த நற்செய்தியை முன்கூட்டியே அறிவித்திருந்தார்கள். அவர்களது எதிர்பார்ப்பின் கோலத்திலே, உலக அரசனாக, செல்வந்தனாக ஆண்டவர் தோன்றவில்லை. மாறாக, ஆன்மீகத் தலைவராக அன்பரசனாக ஏழ்மைக் கோலத்திலே மீட்பர் பிறந்தார். எனினும் முழுமையான விடுதலையை முழு மாந்தருக்கும் பெற்றுக்கொடுக்க முழுமையாகத் தம்மை அர்ப்பணித்தார். இயேசு கொண்டு வந்த மீட்பு முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ராயேலருக்கு அறிவிக்கப்படுகின்றது (உரோ. 1/16). இஸ்ராயேலரை ஒளிர்விக்கும் மாட்சிமையாக (லூக். 25/29–32), இஸ்ராயேலருக்கு விடுதலையளிப்பவராக (லூக். 24/21) இயேசுக்கிறீஸ்து மண்ணுலகில் மனிதனுனார். அவரை ஏற்றுக்கொண்டோர் ஏற்றம் பெற்றனர். ஏனையோர் இன்னும் அவரை எதிர்பார்க்கின்றார்கள்.

## 3. சட்டங்களிலிருந்து விடுதலை

சட்டத்தின் உள் அர்த்தத்தைப் புரியாது சட்டங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்த இஸ்ராயேலருக்கு இறைமகன் கிறிஸ்து சட்டத்தின்படி வாழவேண்டுமே தவிர சட்டத்திற்கு அடிமைப்பட்டு வாழக்கூடாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். சட்டம் மனிதனுக்காகவேயன்றி மனிதன் சட்டத்திற்காக அல்ல என்று கூறி கிறிஸ்து சட்டங்களிலிருந்து விடுதலைபெறும் வழியைக் காண்பித்தார். இஸ்ராயேலருக்கு இறைவன் தந்த வாழ்வுச் சட்டத்தை, சுதந்திர திட்டத்தை சட்டவல்லுனர்களும் பரிசேயர்களும் மற்றவர்களுக்குச் சுமையாக மாற்றினார்கள். மனித மாண்பும் ஒழுங்கும் தந்து சுதந்திரத்தைச் சுவைக்கச் செய்யக்கூடியதாய் சட்டம் அமைய கிறிஸ்து ஆவன செய்தார்.

## 4. நோய்களிலிருந்து விடுதலை

மனிதனுக்கு வரக்கூடிய சகல நோய்களையும் குணமாக்க வல்லவராகக் கிறிஸ்து விளங்கினார். உடல், உள, ஆன்மீக நோய்கள் அனைத்துக்கும் அருமருந்தாகக் கிறிஸ்து காணப்பட்டார். அவரைத் தொட்டவர்கள் அவரது கைபட்டவர்கள் நோயிலிருந்து விடுபட்டார்கள். தொழுநோயாளன் தூய்மை பெற்றான். (லூக். 5/12, 13); திமிர்வாதக்காரன் குணமானான். (லூக். 5/18, 25); குருடன் பார்வை பெற்றான், (லூக். 18/35–43); பசிப்பிணியினால் வருந்தியோர் அப்பம் உண்டு நிறைவு பெற்றார்கள் (லூக். 9/12–17). சாவிலிருந்து விடுதலை பெற்றார்கள் (லூக். 7/1–15, 8/49,–56). இவ்விதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து மனிதர்களைப் பலவிதமான நோய்களிலிருந்தும் விடுவித்து மகிழ்வித்தார்.

## 5. பாவிகள், ஏழைகளுக்கு விடுதலை:

பாவிகள், ஏழைகள் என்று சமுதாயத்தினரால் தள்ளிவைக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்த மக்களுக்கு இயேசு நல்வாழ்வு வழங்கி அவர்களை உயர்நிலைக்கு அழைத்தார். பலராலும் புறக்கணிக்கப்பட்ட ஆட்களுக்குப் புகலிடமாக விளங்கினார். பாவங்களை இயேசு வெறுத்தாலும் பாவிகள்மேல் மிகுந்த இரக்கம் உள்ளவராகக் காணப்பட்டார். பரிசேயன் வீட்டில் பாவிக்கு மன்னிப்பு வழங்கினார் (லூக். 7/36–50). காணாமல் போன ஆடு, காணாமற்போன பணம், காணாமல் போன மகன் போன்ற உவமைகளின் மூலமாக பாவிகள் மட்டில் இறைவனின் அளவற்ற அன்பினை கிறிஸ்து எடுத்துரைக்கின்றார்.

ஏழையாய்ப் பிறந்த இயேசு, ஏழையாய் வளர்ந்த இயேசு ஏழைகளுக்கு ஏற்றம் கொடுப்பதிலே முழுமூச்சாய் உழைத்தார். ஏழைகள் இழிவானவர்கள், இறைவனின் சாபத்தைப் பெற்றவர்கள் என்ற தவறான கருத்தைக் கொண்டிருந்த இஸ்ராயேல் மக்களுக்கு ஏழையின் உண்மை நிலையை உணர்வித்தார். ஏழை, பணக்காரன் என்றபாகுபாட்டை நீக்கி, ஏழைகளுக்கு சம அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுப்பதில் தீவிரமாய் முனைந்தார் இயேசு.

## 6. புதுமனிதன் கிறிஸ்து

மனுவுருவான வார்த்தையானவரின் மறைபொருளில் மனிதனின் மறைபொருள் உண்மையாகவே விளக்கம் பெறுகின்றது. அவர் மனித இயல்பை உருக்குலைக்காது ஏற்றுக் கொண்டதால் அவ்வியல்பு நம்மிலும்கூட மேன்மைமிகு நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. மாசற்ற செம்மறியான அவர் தன்னுரிமையோடு தான் குருதிசிந்தி நமக்கு வாழ்வைப் பெற்றுத் தந்தார். அவர் வழியாக இறைவன் நமக்கும் இறைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையேயுள்ள உறவைப் புதுப்பித்தார், அலகையினுடைய வும் பாவத்தினுடையவும் அடிமைத் தளையினின்று நம்மை விடுவித்தார். துன்பம், சாவு இவற்றின் புதிர் கிறிஸ்துவிலும் கிறிஸ்து வழியேயும் விளக்கம் பெறுகின்றது (இன். உல. தி. 22). கிறிஸ்துவில் எல்லா வகையான விடுதலையும் முழுமை பெறு கின்றது. அவருடைய இரட்சணியச் செயல்கள் விடுதலையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்குகின்றது. பாவத்திலிருந்து அருளிற்கு, இறப்பிலிருந்து வாழ்விற்கு, அநீதியிலிருந்து நீதிக்கு, கீழான மனிதத் தன்மையிலிருந்து உயர் மனிதத் தன்மைக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடத்தப்படல் கிறிஸ்து வின் மூலமாய் சாத்தியமாகின்றது. இறைவனோடும் மனித னோடும் தூய அன்பில் நிரந்தரமாய் நாம் ஒன்றிணைய அவர் அளிக்கின்ற அருட்கொடையாகிய அவரது ஆவி துணை நிற்கின் றது.

''உலகத்தினதும் மனித வரலாற்றினதும் எல்லா இயக் கமும் நீதியான, சகோரத்துவமான உலகினைப் படைப்பதை நோக்கமாகக் கொண்ட அசைவும், சமுதாய வேற்றுமைப்பாடு களை வெற்றிகொள்ளலும் பௌதீக ஒழுக்க நெறித் தரித்திரம் அறியாமை, பசி போன்றவை மனிதனை இழிவுபடுத்துவதி லிருந்து விடுதலை வழங்கும் முயற்சிகள், மனித மாண்பின் உள்ளுணர்வு இவை அனைத்தும் கிறிஸ்துவில் உருவாக்கம் பெற்று கிறிஸ்துவின் இரட்சணிய ஆற்றலிலே தமது பூரணத் துவத்தை எய்துகின்றன. அவர் வழியாக அவரோடு இரட் சணியம் மனித வரலாற்றின் இதயத்தில் குடிகொள்கின்றது.''

— இலத்தீன் அமெரிக்க ஏடு

நீதியான சமுதாயத்தை நிருமாணிக்க மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும் விடுதலைப்பாங்கானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பும் விடுதலையும்

இரட்சணியத்திற்கும் விடுதலைக்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன? — அநீதியான சமுதாயத்தை எதிர்ப்பதற்கும் புதிய ஒரு மனிதனை இறை ஒளியில் படைத்தலுக்கும் இடையே எழும் போராட்டம் என்ன? — இவற்றிற்கான விடையே கிறிஸ்தவ மறைபொருளின் மையமான மீட்பின் கருத்தினை விளக்கும். வரலாற்றில் இறைமகன் கிறிஸ்துவின் இரட்சணிய செயல்களையே இது பிரதிபலிக்கின்றது. முழு மனித இரட்சணியமும் கிறிஸ்து இரட்சகர் என்பதிலேயே தங்கியுள்ளது.

## 1. மீட்பு -- கிறிஸ்தவ மறைபொருளின் மையக் கருத்து

இயேசுக்கிறிஸ்து மனிதனாகப் பிறந்து, பாடுகள் பட்டு, மரணித்து உயிர்பெற்றது மனிதர்கள் எல்லோரும் மீட்பு அடைவதற்காகவே. எந்தச் சமயத்தைச் சார்ந்தவனும், எச் சமூகத்தைச் சார்ந்தவனும் மீட்புப் பெறவேண்டும் என்பதே கிறிஸ்துவின் நோக்காகும். ' இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் எல்லோருக்காகவும் சிந்தப்படும் என் இரத்தம்'. அனைவரும் கிறிஸ்துவின்மூலமாக கிறிஸ்துவில் மீட்புப் பெற உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பதே உண்மை. வெளிப்படையாக கிறிஸ்துவை விசுவசித்து, அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்வதன்மூலம் இறைவனின் இரக்கத்தை நுகர்வதன் மூலம் கிறிஸ்தவர்கள் மீட்பு பெறுகின்றார்கள். கிறிஸ்தவமல்லாதோர் பகிரங்கமாகத் தங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது விசுவாச அறிக்கையை வெளியிடாவிட்டாலும் கிறிஸ்து வோடு கொண்ட நெருங்கிய உறவினால் கிறிஸ்து தரும் மீட்பிலே பங்கு கொள்கின்றார்கள்.

தாங்கள் அறியாத இறைவனைச் சாயல்களிலும் உருவங்களிலும் தேடுபவர்களிடமிருந்து அவர் வெகு தொலைவில் இல்லை. ஏனெனில் அனைவருக்கும் அவர் உயிரையும் மூச்சையும் மற்றெல்லாப் பொருட்களையும் அளிக்கிறார் (அப். நட. 17/25–28). மீட்பராகிய அவர் எல்லா மனிதரும் மீட்புப்பெற வேண்டும் என்று விரும்புகிறார் (1 தீமோ 2/4). தங்கள் குற்றம் எதுவுமின்றி கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவரது திருச்சபையையும் அறியாதவர்கள் நேர்மையான உள்ளத்துடன் இறைவனைத் தேடி, மனச்சாட்சியின் குரலில் இறைவனின் திருவுளத்தை அறிந்து, ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் முடிவில் மீட்பைப் பெறுவர். இன்னும் இறைவனை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் இறைவன் அருளின் துணையோடு உண்மை நெறியிலே நடக்க முயல்பவர்களுக்கும் அனைத்தையும் பராமரிக்கும் இறைவன் மீட்பிற்குத் தேவையான உதவிகளைத் தா மறுப்பதில்லை (திருச்சபை 16).

## 2. மீட்பும் படைத்தலும்

### I. மீட்பின் முதற் செயற்பாடு

வேதாகமத்தின்படி படைத்தல் மீட்பிற்கு முற்பட்ட பகுதியல்ல; மாறாக, அது மீட்பின் ஒரு பகுதியாகும். கடவுள் மனிதரைத் தனது பிள்ளைகளாகவே படைத்தார்; படைத்துக்கொண்டிருக்கிறார். "வரலாற்றில் யாவேயின் செயற்பாடாக படைத்தல் கருதப்படுகின்றது" என்கின்றார் வொண்றாட். படைத்தலே மீட்பின் முதற் செயற்பாடாகும்.

இறைவாக்கினரான 2ம் இசையாஸ் படைப்பின் மட்டில் இஸ்ராயேலருக்குள்ள விசுவாசத்தைத் தெளிவாக விளக்குகின்றார். "யாக்கோபே, உன்னைப் படைத்தவரும், இஸ்ரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேலே உன்னை உருவாக்கியவருமான ஆண்டவர் இப்பொழுது உனக்குக் கூறுகின்றார். அஞ்சாதே ஏனெனில், நாமே உன்னை மீட்டோம்; உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ நமக்கே சொந்தம்'' (இசை 43/1), யாவே படைப்பின் ஆண்டவனும் மீட்பின் தெய்வமுமாய் விளங்குகின்றார். ''உன்னைப் படைத்தவரே உனக்குக் கணவன். சேனைகளின் ஆண்டவர் என்பது அவர் பெயர்; இஸ்ராயேலரின் பரிசுத்தரே உன் மீட்பர். உலகுக்கெல்லாம் கடவுள் என அழைக்கப்படுகிறார்'' (இசை 54/5).

## II. இஸ்ராயேலின் அரசியல் விடுதலை :

இஸ்ராயேலரை எகிப்தியரின் அடிமைத்தளையினின்று விடுவித்தது — ஆண்டவரின் மக்களை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து இரட்சித்தது — விடுதலையின் வேந்தனாக யாவே விளங்கியது. — இஸ்ராயேலின் வரலாற்றின் அடிப்படை அம்சமாகும். ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைத்ததும் எகிப்தினின்று இஸ்ராயேலரை மீட்டதும் ஒரே இரட்சணியச் செயலாகவே இஸ்ராயேலருக்கு தென்பட்டது. படைப்பின் போது முன்னர் காணப்பட்ட வெறுமையைக் குறிக்க ராகாப் (Rahab) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அதே சொல் இறைவாக்கினர் இசையாசுக்கு எகிப்து என்ற பொருளைத் தருகின்றது (இசை 30/7).

இஸ்ராயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தளையினின்று சுரண்டப்படுவதிலிருந்து, ஏழ்மையிலிருந்து விடுதலை பெற்றது புதிய ஒரு இனமாக, இறை மக்களாக அவர்கள் உருவாக்கப் படுவதற்கேயாகும். ஆண்டவர் மோயீசனை மீட்பின் கருவியாக்கினார். ஆண்டவர் மோயீசனை நோக்கி ''எகிப்தில் நம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளைக் கண்ணுற்றோம். வேலை வாங்கும் மேற்பார்வையாளரின் கொடுமையின் பொருட்டு அவர்கள் இடுகிற கூக்குரலையும் கேள்வியுற்றோம். நாம் அவர்கள் துயரத்தை அறிந்தமையால் அவர்களை எகிப்தியர் கைகளின்று விடுவித்து காப்பாற்றவும், இந்த நாட்டி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து நல்ல பரந்த நாட்டிலே பாலும் தேனும் பொழியும் பூமியிலே...... அவர்களைக் கொண்டுபோய் சேர்க்கவும் இறங்கி வந்தோம்...... இஸ்ராயேல் மக்களாகிய நம் மக்கள் எகிப்தினின்று புறப்படும் பொருட்டு உன்னைப் பாரவோனிடம் அனுப்புவோம்'' என்றார் (யாத் 3/7–10).

இஸ்ராயேலரின் இக்கடத்தலின்போது யாவே பகலில் மேகத் தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் அவர்களுக்கு இரவும் பகலும் வழித்துணையாயிருந்தார். எனினும் எகிப்தியர் அவர்களைத் துரத்தி வந்ததைக் கண்டு அச்சம் கொண்டவர்களாய் மோயீசனை எசினார்கள். ''எகிப்தில் கல்லறைகள் இல்லாதிருந்ததினாலோ நீர் பாலைவனத்திலே சாகும்படி எங்களைக் கூட்டிவந்தீர்? எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களை சும்மா விட்டுப்போம் என்று சொன்னோம் அல்லவா? பாலைவனத்தில் சாவதைக் காட்டிலும் அவர்களுக்கு வேலை செய்வது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்'' (யாத் 14/11–12).

இஸ்ராயேலரின் முணுமுணுத்தலைப் பெரிதுபடுத்தாது யாவே அவர்களை செங்கடலைக் கடக்க உதவிசெய்தார். எகிப்திய பண்டிகளை செங்கடலில் மூழ்கடிக்கச் செய்தார். விண்வெளியைப் பார்த்து அதை விரித்தவரும் மண்ணுலகை நிலை நிறுத்தி, அதில் செடிகளை முளைப்பித்தவரும் அதன்மேல் இருப்பவர்களுக்கு மூச்சைக் கொடுத்து நடமாடுபவர்களுக்கு ஆவியைக் கொடுத்தவருமான ஆண்டவராகிய கடவுள் கூறுகின்றார்: ஆண்டவராகிய நாமே அறத்தை நிலைநாட்ட உன்னை அழைத்திருக்கிறோம். உன் கையைப் பிடித்து உன்னைக் காத்தோம். குருடர்களுக்கு கண்களைத் திறக்கவும், கட்டுண்டவரைத் தளையினின்று விடுவிக்கவும், இருளிலிருப்போரை சிறையினின்று மீட்கவும், உன்னை மக்களுக்கு உடன்படிக்கையாகவும், புற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்தினோம்'' (இசை 42/5–7).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. புதுப் படைப்பும் முழு நிறைவுபெறுதலும் :

புதுப்படைப்பின் சிறப்பியாக முழுநிறைவு கொடுக்கும் இறைவனாக கிறிஸ்து காணப்படுகிறார். ''அவர் கட்புலனாகக் கடவுளின் சாயல்; படைப்புக்கெல்லாம் தலைப் பேறானவர். ஏனெனில் அவரில் அனைத்தும் உண்டாயிற்று. அனைவரும் உண்டானது அவரிலேதான். அவராலேயே அவருக்காகவே அனைத்தும் ஆயின...... முழுநிறைவும் அவரில் குடிகொள்ள வேண்டுமென்று இறைவன் திருவுளம் கொண்டார். சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார் (கொலோ 1/15-25).

படைப்பின் சிகரமும் மையமுமாகிய மனிதன் அச்செயற்பாட்டினை தனது தொழிலின் மூலமாகத் தொடரவேண்டியவனாகின்றான் (ஆதி 1/28), அநீதிகள் அக்கிரமங்கள் இல்லாது நீதியான சமுதாயத்தை, புதிய உலகத்தைப் படைக்க ஒவ்வொரு மனிதனும் அழைக்கப்பட்டுள்ளான். கிறிஸ்துவின் மூலமாக, கிறிஸ்து வழங்கும் அருளைக் கொண்டே இது சாத்தியமாகும். படைத்த இறைவனை மகிமைப்படுத்துவதன் மூலமாக படைக்கப்பட்ட மனிதன் முழுநிறைவு பெறுவான்.

## 3. எதிர்கால எதிர்பார்ப்புகள்

இறைவனின் நிகழ்கால இருத்தல், வரலாற்றினில் மனித வாழ்க்கையில் இறைவன் மனிதனோடு கொள்ளும் உறவு, அவனது நிகழ்கால விடுதலை அனுபவங்கள் எதிர்காலத்தில் நித்திய விடுதலையை அவன் பெற்றுக்கொள்வதற்கு இட்டுச் செல்பவையாக அமைகின்றன. நீதி நிலவுகின்ற சமுதாயத்தில் அன்பு, இரக்கம், பகிர்தல், பக்தி போன்ற இறை இராட்சிய நற்பண்புகள் நிறைவாய் உள்ள சமுதாயத்தில் இறை இராட்சியம் நிலைநாட்டப்படும். இறை மீட்பு மனிதவாழ்வினை முழுமைப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவாக்கினர் சமாதானத்தின் இராட்சியத்தினைப் பற்றிய நற்செய்தியை இஸ்ரராயேலருக்கு எடுத்துரைத்தார்கள். ஆனால் நீதி நிலைநாட்டப்படுதலையே சமாதானம் வேண்டி நிற்கின்றது. "நீதியால் விளையும் பயன் சமாதானம், நீதியின் பலன் அமைதியும், என்றென்றும் நீடிக்கும் அச்சமில்லா வாழ்வுமே" (இசை 32/17). ஏழைகளின் உரிமைகளைப் பாது காத்தல், மற்றவர்களால் அடிமைப் படுத்தப்படலாம் என்ற பயத்திலிருந்து விடுதலை பெற்ற வாழ்வு, நீதியில் நிலைத்து நிற்றல் போன்றவை இறை அரசின் கனிகளாகின்றன.

சமாதானம், நீதி, அன்பு, சுதந்திரம் ஆகியவை தனியார் சக்திகளாயிராது சமுதாய சக்திகளாக விளங்கி வரலாற்று விடுதலையை நிலைப்படுத்துகின்றன. வறுமையையும் சுரண்டப் படுதலையும் இல்லாமல் செய்தல் இறை இராட்சிய வருகையின் அறிகுறியாகும். அப்பொழுது இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள் நித்திய இறை இன்பத்தை அனுபவித்து அகம் மகிழ்வார்கள். ●

---

**இறந்தகாலம் :**

**மனிதன் உருவில் இறைவன்**

**நிகழ்காலம் :**

**மனிதனைத் தேடும் இறைவன்**

**எதிர்காலம் :**

**இறைவன் வடிவில் மனிதன்-**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சாதன விடுதலை வாழ்வு

## 1. பொதுவான அருள் வாழ்க்கை:

பொதுவாக திருச்சபையானது ஒரு அருட்சாதனமாக விளங்கி, இறைமக்கள் அனைவருக்கும் அருள் வளத்தை ஈந்து, விடுதலை வாழ்வினை வளர்க்கின்றது. அது இறைவன் அளிக்கும் ஒப்புரவை, புதுவாழ்வை மனிதகுலத்தின் நலனுக்காகத் தங்குதடையின்றி பகிர்ந்தளிக்கின்றது. இறைவனோடு இறைமக்கள் கிறிஸ்துவின்மூலம் இணைவதன் நிமித்தம் அருள் வாழ்க்கை சாத்தியமாகின்றது என்பதைத் திருச்சபை எடுத்தியம்புகின்றது. திருச்சபையின் தலை என அழைக்கப்படும் கிறிஸ்துவும் அவரது மறையுடல் என்ற அவர் தம் உறுப்பினரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதில்தான் கிறிஸ்துவும், திருச்சபையும் நிறைவளர்ச்சி காணமுடியும். "நானே வழியும் உண்மையும் உயிரும்" (அரு. 14–6) என்றும் என்னைப் பிரிந்து உங்காளல் ஒன்றும் செய்யமுடியாது" (அரு. 15–5) என்றும் கூறுகின்ற கிறிஸ்து இறைமக்களுக்கு நிறைவாழ்வு வழங்குகின்றார். பாவத்திலிருந்து விடுதலை பெற்ற வாழ்க்கை, பரிசுத்தமான வாழ்க்கை, பாசத்தை பங்கிடுகின்ற வாழ்க்கை அருள் வாழ்க்கையாகும்.

## 2. விடுதலையும் நற்கருணையும்:

### (i) அன்பின் அருட்குறி நற்கருணை:

இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியன நம்மீது அவர்கொண்ட அன்பினையே எடுத்துக்காட்டுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இந்த மீட்புச் சம்பவம் அருட்சாதனங்கள் வழியாக திருச்சபையில் இன்றும் தொடர்கின்றது. நற்கருணை வழிபாட்டில் இந்நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. நற்கருணை என்பது நன்றிகூறுதலும் நினைவாக்கமும் பலி உணவும் ஆகும். நற்கருணையில் கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும் நினைவு கூரப்படுகின்றது; நினைவாக்கம் செய்யப்படுகின்றது. இத்திருவிருந்தில் பங்குகொள்ளும் அனைவரும் இறை குடும்பமாக ஒன்றுகின்றார்கள். அன்புப் பிணைப்பில் நிலைநாட்டப்படுகிறார்கள்.

(ii) சகோதர ஒருமைப்பாட்டின் அருங்குறி:

இறப்பிலிருந்து உயிர்ப்புக்கு, பாவத்திலிருந்து பரிசுத்த தனத்திற்கு, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வாழ்விற்கு மேற்கொள்ளப்படுகின்ற கடத்தலை நற்கருணை குறிப்பிடுகின்றது. எகிப்திலிருந்து இஸ்ராயேல் மக்கள் விடுதலை அடைந்து இறைவனோடு உடன்படிக்கை செய்ததை புதுப்பிக்கும் நாளன்று இயேசு தனது இறுதியுணவை உண்டார்; நற்கருணையை ஏற்படுத்தினார் என்று நற்செய்தி ஏடுகள் கூறுகின்றன. இயேசுக்கிறிஸ்துவின் பாஸ்கா யூதரின் பாஸ்காவின் முழுப்பொருளை விளக்குகின்றது. அடிமைத்தனத்தினின்று யூதர்கள் பெற்ற அரசியல் விடுதலையை யூதர்களின் பாஸ்கா நினைவுபடுத்துவதுபோல் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று மாநிலம் பெற்ற மீட்பினை அறிவுறுத்துகின்றது. கிறிஸ்துவின் பாஸ்கா பல கோதுமை மணிகள் சேர்ந்து உருவாக்கிய அப்பமும் பல திராட்சைப் பழங்கள் சேர்ந்து உருவாகிய இரசமும் சகோதர ஒருமைப்பாட்டின் சின்னங்களாக விளங்குகின்றன. தில்லாட் என்ற மறைநூல் வல்லுனர் கூறுகின்றார்: "நற்கருணை என்பது தனி மனிதனின் வாழ்வு செழிக்க மட்டும் கொடுக்கப்பட்டதல்ல; ஆனால் பலர் ஒன்றுகூடி நன்றாக உண்ணும் விருந்தின் சூழ்நிலையிலேயே உண்டாக்கப்பட்டது; பலர் ஒன்றுகூடி ஒரே சமுதாயமாக இருக்க, சகோதர ஒருமைப்பாட்டை உருவாக்க உண்டாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே நற்கருணை வழிபாடும் சகோதர ஒருமைப்பாடும் வேறுபடுத்தப்படுகின்றதோ அங்கே உண்மையாக நற்கருணை வழிபாடு நடப்பதில்லை. ஏனெனில், பாஸ்கா மறைபொருள் ஒருமைப்பாட்டை உண்டாக்குவதாகும். எனவேதான், கொமிலோபோரஸ் அன்பின் கட்டளையை கிறிஸ்தவ சமுதாயம் நிறைவேற்ற முயலாத வரையில் நற்கருணை வழிபாட்டைத் தகுந்த முறையில் கொண்டாடுவதில்லை என்று கூறுகின்றார். வழிபாட்டையும் சகோதர ஒருமைப்பாட்டையும் பிரித்த பொழுது இஸ்ராயேல் மக்களை இறைவாக்கினர் கண்டித்தார்கள் (ஒசே. 6–6). புனித சின்னப்பர் நற்கருணை ஏற்படுத்துதல் பற்றிக் கூறுவதற்கு முன் நற்கருணை வழிபாட்டில் பங்குகொள்ள இருக்கவேண்டிய தகுதியைப் பற்றிக் கூறுகின்றார். கொரிந்தியரிடம் சகோதர ஒருமைப்பாடும் அன்பும் இல்லாததைக்குறித்துக் கடிந்து கொள்கிறார் (1 கொரி. 11/17-34) இறை அன்பையும் சகோதரபாசத்தையும் வளர்க்க வேண்டிய திருவிருந்தில் பங்குகொண்ட கொரிந்திய கிறிஸ்தவ மக்கள் முரணான முறையில் பாகுபாடுகளையும் வேற்றுமைப் பாடுகளையும் வளர்த்ததை முன்னிட்டு அவர்களைப் புனித சின்னப்பர் கண்டிக்கின்றார்.

நற்கருணை வழிபாட்டிற்கும் அன்புவாழ்வு, ஒற்றுமை வாழ்வுக்கும் உள்ள நெருங்கிய உறவை விளக்கும் சொல் கொய்னோனியா (Koinonia) ஆகும், இச்சொல்லுக்கு 3 கருத்துக்கள் உண்டு என்று மறைவல்லுனர் கூறுகின்றார்.

(அ) உலக வாழ்வுக்குத் தேவையான பொருட்களை எல்லோரும் சமமாகப் பெற்றிருப்பதாகும். இது சகோதர அன்பின் அடையாளம், எருசலேம் கிறிஸ்தவர்களுக்குக் கொரிந்தியர் செய்த உதவியைக் குறிப்பிட இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (2 கொ. 9/13, 2 கொரி 8/3, 4 15/16, 27)

(ஆ) கிறிஸ்வதர்களும் கிறிஸ்துவும் நற்கருணை வழியாக ஒன்றித்து இருப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1 கொரி 10/16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கிறிஸ்தவர்களுக்கும் விண்ணகத் தந்தைக்கும் உள்ள உறவை (1 அரு. 1/ந) கிறிஸ்தவர்களுக்கும் இறைமகனான இயேசுவுக்கும் உள்ள உறவை (கொரி. 1/9, 1 அரு. 1/3 கிறிஸ்தவர்களுக்கும் பரிசுத்த ஆவிக்கும் உள்ள உறவைக் குறிக்க (2 கொரி. 13/14, பிலி 2/1) பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

(iii) புரட்சியின் வடிவம் நற்கருணை:

பாவத்தால் பிளவுபட்டிருந்த இவ்வுலகை ஒன்றுபடுத்த இறைவனோடு ஒன்று சேர்க்க இயேசு மனிதனானார். இம்மீட்புச் செயலைத் தனது இறப்பாலும் உயிர்ப்பினாலும் நிறைவேற்றினார். இது ஓர் அன்புப் புரட்சி. ஆக்கப் புரட்சியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்ற திருச்சபையை ஏற்படுத்தினார். மூவொரு கடவுளின் ஒன்றிப்பிலே இவ்வுலகை ஓரே குடும்பமாக இணைக்க விரும்பினார். அகம்பாவம், ஆணவம், அடிமைத்தனம் போன்றவை அகற்றப்படவும் அன்பு, சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் வளர்க்கப்படவும் புரட்சியின் வடிவமாய், மலர்ச்சியின் சின்னமாய் நற்கருணை விளங்குகின்றது.

## 3. விடுதலையும் ஒப்புரவு அருட்சாதனமும்

### I. மனிதன் தன்னோடு ஒப்புரவாதல்

உள்ளத்தில் அமைதியின்றி ஆன்மீக தாக்கத்தினால் அலைக்கழிக்கப்பட்ட மனிதன் ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலமாக தன் உள்ளத்திலே உறைகின்ற இறைவனைக் காண்கின்றான். இதயமதில் இறைவனோடு சங்கமிக்கின்றான். இழந்துவிட்ட அமைதியினைப் பெறுகின்றான். முறிந்துபோன உறவினைப் புதுப்பிக்கின்றான். தன் உள்ளத்தில் ஏற்பட்டுவந்த முரண்பாடுகளுக்குத் தெளிவு பெறுகின்றான். எனவே ஒப்புரவு அருட்சாதனத்தின் ஆரம்பக்கட்டமாக ஆன்மீதியான மனமாற்றம் இடம்பெறுகின்றது. இவ் ஆன்மீக விடுதலை அவனைப் பரிசுத்த தனத்தில் பலப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II, இறைவனோடு ஒப்புரவாதல்

ஒப்புரவு என்னும் சொல்லின் கிரேக்க ஆதாரமொழியைக் கொண்டு அதனை ஆராயும்போது அந்தச் சொல்லானது,

அ. பழமையை அழித்து புதுமையை நிலைநாட்டும் செயலைச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆ. பாவத்தை அழித்து புண்ணியத்தை நிலைநிறுத்துகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

இ. பிணக்கை உடைத்து நல்லதை நல்கும் செயலைச் சுட்டிக்காட்டுகின்றது.

மனிதன் தனது பாவநிலையை ஏற்று, இறைச் சக்தியில் தன்னைச சரணடையச் செய்யும்பொழுது இறைவனோடு ஒப்புரவாகின்றான்; இறைவனோடு ஒன்றிணைகின்றான். இறைவனோடு தொடர்பற்ற நிலையில் வாழுகின்ற மனிதன் நிறைவான மகிழ்வில் நிலைத்திருப்பான்.

ஒப்புரவு என்பது கடவுள் செய்கின்ற ஒரு செயலாக இருக்கின்றது என்று 2 கொரி 5/6–20 பகுதி கூறுகினறது. இங்கு புனித சின்னப்பர் கடவுள் நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் என்று கூறுகின்றார். ஒப்புரவின் முதலும் முடிவுமாக விளங்குபவர் கடவுள். இறைவன் பிரிந்துபோன கடவுள் அல்ல. இறைவனை விட்டுப் பிரிந்து சென்றவனும் இறைவனைத் தேடி திரும்பிவிடவேண்டியவனும் மனிதனே. இறைவன் எப்பொழுதும் நம்மட்டில் ஒப்புரவாகிய நிலையிலும் உறவு பூண்ட நிலையிலும் இருக்கின்றார். இது ஊதாரிப்பிள்ளையின் உவமையில் தெளிவாக விளக்குகின்றது. எப்போது தன் தனயன் திரும்பி வருவான் என்று தந்தை வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தார். அவன் திரும்பி வந்ததும் எவ்வித நிபந்தனையுமின்றி முழு அன்புடன் அவனை ஏற்றுக்கொள்கின்றார். அத்தோடு புனித சின்னப்பர் இவ்வாசகத்தின் மூலம் இயேசுவே இறைவனையும் எம்மையும் இணைக்கும் பாலமாக விளங்குகின்றார் என்று விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து புனித சின்னப்பர் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்தில் (Col. 1/21-22) இறைவனோடு மனிதன் இணைக்கப்படுகின்றான் என்றும் இந்த ஒப்புரவும், பிணைப்பும், சமாதானமும் இயேசுவின் பாடுகளினாலும் மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் நமக்கு அருளப்படுகின்றது என்றும் கூறுகின்றார். பகைமை உள்ளம் கொண்டவர்களாய் பரமனை மறந்து பாவநிலையில் காணப்பட்டவர்கள் இயேசுவின் சாவின் வழியாய் பரிசுத்தராய் இறைவன் முன் நிறுத்தப்படுகின்றார்கள்; இறைவனோடு கொண்ட பரஸ்பர அன்பினில் நித்தியமும் நிலைநாட்டப்படுகின்றார்கள்.

## III. மனிதர்களோடு ஒப்புரவு :

உண்மையான மனமாற்றம், ஒப்புரவு மனிதன் மற்றைய மனிதர்களோடு கொண்டுள்ள உறவைப் புதுப்பிக்கின்றது, "நீ யாரோ! நான் யாரோ! என்று ஒருவரை ஒருவர் அறியாமல், புரியாமல் அந்நியராய் வாழ்ந்தவர்களை இணைக்கின்றது. பகைமையில் வாழ்ந்தோரை பாசத்தில் பலப்படுத்துகின்றது. மனிதன் மனிதனோடு சேர்ந்து வாழப் பழகிக் கொள்ளும்போது அன்பினையும் அருளினையும் அனைத்தினையும் பகிர்ந்தளித்து வாழும்போது ஒப்புரவு சாத்தியமாகின்றது. "குருவே, நான் யாருக்காவது குற்றம் செய்து மற்றவர்களுடைய பொருட்களை அபகரித்திருந்தால் ஒன்றிற்கு நாலு மடங்காகக் கொடுத்து விடுகின்றேன்" என்று கூறி சக்கேயு யேசுவின் உறவாடலின் மூலம் மனம் மாறியபின் மனிதர்களோடு ஒரு புதிய உறவை ஆரம்பிக்கின்றான்.

பகைமையையும் பழிவாங்கும் தன்மையையும் சுரண்டல்களையும் சுமைப்படுத்தல்களையும் முறியடிப்பதன் மூலம் அன்பினையும் மனித அபிமானத்தையும் வளர்ப்பதன் மூலம் சமுதாய ஒப்புரவாக்கல் நிறைவு பெறுகின்றது. நற்பண்பாடுகளில் பாமரத்தனமும் இனம், மொழி, மறை, பால், தொழில் ரீதியாக பாரபட்சம் காட்டுதலும் சமுதாய சீரழிவிற்கே இட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும். தனிமனிதனின் வளர்ச்சியும் சமுதாய சுபீட்சமும் மனிதன் மனிதனோடு கொள்ளுகின்ற அன்புறவு ஆழப்படுத் தப்படுவதிலேயே தங்கியுள்ளது, ●

உண்மையான அன்பு,
உயர்வான இலட்சியம்,
உத்தமான குடும்ப வாழ்க்கை,
உறுதியான நாணயத்தன்மை,
நீதியான அரசாங்கம்,
நியாயமான சட்டதிட்டங்கள்,
பரவசமான பேச்சுகள்,
பக்தியான செயற்பாடுகளே,
சமுதாய ஒப்புரவாக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையும் புரட்சியும்

## 1. பழைய ஏற்பாட்டில் வறுமை

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேலர் வறுமையை வேண்டப்படாத ஒன்ருக, இறைவனின் தண்டனையாகக் கிடைக்கப்பட்ட ஒன்ருகக் கருதினர்கள். வலிமையற்ற, வறுமையுற்ற, தாழ்வுபட்ட, நலிவுற்ற, தரித்திரம்மிக்க நிலையில் இருந்து விடுதலை பெற்று உலகரீதியாக முன்னேற்றமடைவதை விரும்பி இறையாசி வேண்டினர்கள். ''தீயவர்கள் காணிக் கற்களை தள்ளி நடுகின்ருர்கள். மந்தைகளைக் கொண்டுபோய் மேய்க்கின்ருர்கள். திக்கற்றவர்களின் கழுதையை வெட்டிக் கொண்டு போகின்றனர். கைம்பெண்ணின் எருதை அடைமானமாய் எடுக்கின்ருர்கள். ஏழைகள் வழியை விட்டு அப்புறப்படுத்தப் படுகின்ருர்கள். இவர்களுட் சிலர் காட்டுக் கழுதைகள் போல் பாலைநிலத்தில் இரைக்காகக் காத்திருந்து தங்கள் பிள்ளைகளுக்கு உணவுதேடும் வேலையை மேற்கொள்கின்ருர்கள்'' (யோபு 24:2–12).

இஸ்ராயேல் பழிச்செயலுக்குமேல் பழிச்செயல் செய்ததற்காக இட்ட தண்டனைத் தீர்ப்பை மாற்றமாட்டோம். அவர்கள் நீதிமான்களை பணத்திற்கும் எளியவனை ஒரு சோடிச் செருப்புக்கும் ஏழைகளின் தலைகளை மண்ணில் பட மிதிக்கின்ருர்கள்'' (ஆமோ. 2:6–7).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் மனிதனுக வாழவேண்டியவன். சகல உரிமைகளுடனும் கடமைகளுடனும் வளரவேண்டியவன், அவன் இன்னொருவனுல் நசுக்கப்படுவதோ அன்றேல் அவ்வாறு நடைபெறுவதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருப்பதோ மனித மாண்புக்கு முரணுனது. அநீதி, அக்கிரமம் வளர்வதைக் கண்டு கொண்டும் பேசாதிருப்பது அவற்றிற்கு உடந்தையாய் இருப்பதைக் காட்டுகின்றது.

"அநீதியான சட்டங்களை ஆக்குவதற்கு அநியாயங்களை எழுதி வருவோருக்கு ஐயோ கேடு. அவர்கள் ஏழைகளுக்கு நீதி வழங்காமல் ஒதுக்குகின்றுர்கள். நம் மக்களின் எளியோரின் உரிமையைப் பறிக்கின்றுர்கள். கைம்பெண்களைப் பொருள்களைப்போல பறிக்கின்றுர்கள். திக்கற்றவர்களை இரையாக்கிக் கொள்கின்றுர்கள்" (இசை. 10:1-2).

இவ்வாறு இறைவாக்கினர் ஏழை எளியவர்கள்மீது ஏனேயோர் செய்கின்ற அநியாயங்கள், அட்டூழியங்கள், அக்கிரமங்கள் போன்றவற்றை எதிர்த்து ஏழைகளுக்கு நீதி வழங்குமாறு இறைவாக்குரைத்தார்கள். வறுமையை வளர்ப்போரைக் கண்டித்தார்கள். சுமைப்படுத்தலும் சுரண்டுதலும் தகர்த்தெறியப்பட வேண்டுமென வீரமுழக்கம் செய்தார்கள் (எசே. 12:8), ஆமோஸ் 8:5), (நிக்கேயாஸ் 6:10-11), (இசை. 3:14), (எரேமி 6:27, 6:12).

ஒவ்வொரு இறைவாக்கினரும் தங்கள் தங்கள் காலத்தில் மலிந்து காணப்பட்ட அநீதிகளை கண்டிக்கின்றனர். உ-மாக

நிலத்தினை அபகரித்தல் [எசேக்கியேல் 22:29]
[மிக்கேல் 2:1-3]

ஆழும் வகுப்பினரின் வன்செயல் [மிக்கேல் 3:1-2]
[ஆமோ 1:1]

அடிமைத்தனம் [மிக்கேல் 2.6, 8:6]

அநீதியான வரிகள் [ஆமோஸ் 4:1, 5:11-12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. புதிய ஏற்பாட்டின் வறுமைக்கெதிரான குரல்

"நெஞ்சிலே செருக்குற்றோரை சிதறடித்தார்; வலியோரை அரியணையில் நின்று தாழ்த்தினர். தாழ்ந்தோரை; உயர்த்தினர்; பசித்தோரை நலன்களால் நிரப்பினர்; செல்வந்தரை வெறுங்கையராய் அனுப்பினர்" (லூக். 11/53-53)
என்று மரியாள் கூறியது ஆண்டவரின் ஆட்சி நிலைநாட்டப் படும்பொழுது, உலகரீதியான ஆட்சியும் அதிகாரமும் இல்லாமல் போக அன்பின் இராட்சியம் நிலைநாட்டப்படும் என்பதைக் குறிக்கின்றது.

"என்னை பின் செல்ல விரும்புகின்றவன் தன்னையே மறுத்து தன் சிலுவை நாள்தோறும் சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்" என்று ஏழைகளைத் தேற்ற முயன்ற கிறிஸ்து அதிக செல்வ ஆசை கொண்டு அலைவோருக்கெதிராக. "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன்னையே பாழாக்கினால் பயன் என்ன?" [லூக் 9:23,25] என்று கேள்வி தொடுக்கின்றார்.

"ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள்; ஏனெனில் கடவுளின் அரசு உங்களதே" (லூக் 6:20) என்று மலைப்பொழிவில் யேசு ஏழைகளைப் போற்றுவதைக் காண்கின்றோம். நாங்கள் பேறுபெற்றவர்கள் என்று ஏழைகள் அவ்வாறே சோம்பித் திரிய வேண்டும், ஏழைகள் மீண்டும் மீண்டும் ஏழ்மையிலேயே தள்ளப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் கருத்தல்ல. மாறாக, ஏழைகள் நாளையைப் பற்றிக் கவலைப்படாமல் ஆண்டவனிலே முழுமையாக தங்கி வாழும் தன்மையுடையவராகக் காணப்படுவதால் அவர்களைப் பாக்கியவான்கள் என்று யேசு கருதுகின்றார்.

"அவர் செல்வமிக்கவரமயிருந்தும் அவருடைய ஏழ்மையில் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானர்" (2 கொரிந். 8:9). கடவுள் தன்மையில் விளங்கிய அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதனுக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி தம்மையே தாழ்த்தி அதுவும் சிலுவைச்சாவை ஏற்கும் அளவிற்கு கீழ்ப் படிபவரானார் (பிலிப்பி 2:6-9).

கிறிஸ்துவின் வறுமையாக்கல் மனிதரை நிறைவு பெறச் செய்வதாகும். தன்னுடைய வறுமையினால் மற்ற வர்கள் நிறைவுபெறவேண்டும் என்பதை மையமாகக் கொண்டே தன்னைத் தியாகம் செய்தார். மனித சுயநலத்திற் கெதிராகப் போராடி பணக்காரர், ஏழைகள் சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் என்ற வகுப்புவாதத்தை முற்றாக முறி யடிக்க முயன்றார். ''வறுமையை எதிர்த்துப் போராடாவிடில் ஏழைகளோடு சேரமுடியாது'' என்று ரிக்கேயர் கூறுவது போல் கிறிஸ்து வறுமைக்கெதிராக குரல் கொடுத்ததன் மூலம் ஏழைகளோடு ஒன்றிணைந்தார். இந்த வகையில் கிறிஸ்தவ ஏழ்மை என்பது அன்பின் வெளிப்பாடாகும்; வறுமையை எதிர்த்து வறியவர்களுடன் ஒன்றுசேர்வதாகும். சமத்துவம் சகோதரத்துவம், பணிபுரிதல் போன்றவற்றிற்கு உருக் கொடுப்பதாகும்.

''விசுவாசிகள் அனைவரும் தம் உடமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய் கொண்டிருந்தனர். நிலபுலன்களையும் உடமைகளையும் விற்று அவரவர் தேவைக்கேற்ப எல்லோரும் பகிர்ந்துகொண்டனர். நாள்தோறும் தவறாமல் ஒரே மன தாய் கோவிலில் கூடினர். வீடுகளில் அப்பத்தைப் பிட்டு மகிழ்வோடும் கபடமற்ற உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர்'' (அப் 2:44-46)

இன்னும் புதிய ஏற்பாட்டில் பணக்காரர்களினால் மேற் கொள்ளபபடும் சுரண்டல் கண்டிக்கப்படுகின்றது:

(லூக் 6:24-25 ; 12:13-21; 16:19-31; 18:18-26), (யாகப்பர் 2:5-8: 4:13-17; 5:16).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவரும் இல்லை (அப் 2:44–46)

இவ்வாறான வறுமையின்மை வென்ற ஒரு சமுதாயம் தான் கிறிஸ்துவின் பெயரால் அவரின் உயிர்ப்பில் உருவானது. நாளடைவில் அந்நிலை மாறிவிட்டது. வறுமையை அடைவதே எமது நோக்கமாக இருக்கமுடியாது. மாறாக ஒருவருக்கொருவர் பகிர்ந்து வாழ்வதன் மூலம், அன்பு நெறி வாழ்க்கையை திரும்பவும் மேற்கொள்வதன் மூலம் வறுமையினை முறியடிக்கப் புரட்சியை ஏற்படுத்தி, பரவலான விடுதலையைப் பெறமுடியும்.

## 3. புரட்சி பரவலாக்கப்படல்

நான்கு தெருக்களில் இறங்கி வன்செயல் போராட்டங்கள் மூலம் நாட்டை இரத்தக்களரியாக்குவதன்று புரட்சி; மாறாக மிக விரிவான சமுதாய மாறுதல் ஏற்படுத்தும் செயலே "புரட்சி" என்கிறார் பிரஞ்சு எழுத்தாளர் ஷான் பிரன்சுவா றெவல். புரட்சி பின்வரும் ஐந்து அம்சங்களைக் கொண்டிருக்கும்.

- அரசியல் புரட்சி அதன் அமைப்பில் மாறுதல்.
- சமுதாய புரட்சி அதன் அமைப்பில் மாறுதல்.
- தொழில் நுட்ப விஞ்ஞானப் புரட்சி.
- சர்வதேச உறவுகள், பண்பாடுகள், நெறிகள், வழிமுறைகளில் புரட்சி.
- நாடுகளுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயுள்ள உறவுகளில் புரட்சி.

இவ் ஐந்து அம்சங்களும் இணைந்த நிலையில் ஒரு நாட்டில் புரட்சி ஏற்படும்போதுதான், புரட்சிகள் முழுமையின் பரவலான பயன்பாட்டினைப் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியை எதிர்த்துப் புரட்சி செய்வதென்ருல் கட்டாயம் இரத்தம் சிந்தியே ஆகவேண்டும் என்பது அவசியமில்லே, வன்முறையில் போர் புரிதல் புரட்சியின் வகைகளில் ஒன்ரு கும். இது சகல சமாதான முறைகளேயும் பரீட்சித்து தோல்வி கண்டபின்னர் இறுதி செயற்பாடாக அமையவேண்டும் என்று நெறியாளர் விரும்புவர்.

வன்முறைதான் புரட்சியைப் பரவலாக்கும் வன்முறை மூலம்தான் தீர்வைப் பெற்றுவிடலாம் என்று கொள்கை யுடையோருக்கு காந்தியின் அகிம்சைப் போராட்டம் சவாலாக அமைகின்றது. இந்தியாவிற்கு விடுதலேயைப் பெற்றுத்தரு வதாக உறுதிகொண்டிருக்கின்றீர்களே அவ்விதம் பெறு வதற்கு முன் இறந்துவிட்டால் என்ன செய்வீர்கள்? என்று காந்தியடிகளிடம் ஒரு நிருபர் கேட்டபோது இந்தியாவிற்கு விடுதலே பெற்றுக்கொடுக்காது "நான் சாகமாட்டேன்" என்று சட்டென்று மறுமொழி பகர்ந்தார். நான் நிச்சயம் வெல் வேன் என்று நம்பினுர்; அகிம்சை வழியில் போராடினுர்; வெற்றியும் கண்டார்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே உங் களுக்கு ஐயோ கேடு. நீங்கள் வெள்ளேயடித்த கல்லறைக்கு ஒப்பானவர்கள். இவை வெளியே மனிதர்களுக்கு வனப்பாகத் தோன்றுகின்றன. உள்ளேயோ இறந்தோர் எலும்புகளும் அசுத்தமும் நிறைந்துள்ளன. அவ்வாறே வெளியே நீங்களும் மனிதர்களுக்கு நீதிமான்களாய் தோன்றுகின்றீர்கள். உள் ளேயோ கள்ளத்தனத்தாலும் அக்கிரமத்தாலும் நிறைந் திருக்கின்றீர்கள் (மத். 24:27-28) என்று கிறிஸ்து அநீதியை அக்கிரமங்களே எதிர்த்துப் புரட்சி செய்தார்.

## 4. மறுமலர்ச்சி

புரட்சிப் பாதையிலே, அதுவும் வறுமைக்கெதிரான புரட் சியிலே புதிய உலகைப் படைக்க முயல்வோர் பணம் படைத்த முதலாளிகளே, மக்களே அடிமைப் படுத்துவோரை, சுரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரை, மகிமைப்படுத்துவோர்களாயின் புரட்சியை ஆரம்பிக்கும் முன்னரே பின்வாங்கி விட்டார்கள். மதில்மேல் பூனைகளைப் போன்ற சந்தர்ப்பவாதிகளும் சுயநலம் கருதாத மறுமலர்ச்சியாளர்களும் ஒருவருக்கொருவர் முரணானவர்கள். ஏனெனில் சந்தர்ப்பவாதிகள் சமூகத்துரோகிகள். மறுமலர்ச்சியாளர்கள் புதுஉலகம் படைப்பவர்கள்.

மறுமலர்ச்சியாளர்கள் தம் இலட்சியத்தில் தெளிவான நோக்குடையவர்கள். சுயநலம் கருதி பின்வாங்க மாட்டார்கள்; பிறர் துன்புறுவதைக் கண்டு சிரிக்க மாட்டார்கள் பிறரை அடிமைகளாக, போதைப் பொருட்களாகப் பயன்படுத்த மாட்டார்கள்.

ஒருசில குடும்பங்களில் வயதுபோன தாய்மார்கள் தமது சொந்தப் பிள்ளைகளினுல் வேலைக்காரிகளையும் விட மோசமான நிலையில் நடத்தப்படுகின்றுர்கள். தம் சொந்தப் பிள்ளைகளின் வீட்டிலே சம்பளமில்லா அடிமைகளா அவர்கள்? இது ஓர் இனம் இன்னெரு இனத்தின்மேல் நம் இந்நாட்டில் தற்பொழுது மேற்கொண்டு வரும் அடிமைத்தனம் போன்றதல்ல. மாருக; இது ஒரு மனிதனுல் அதுவும் சொந்தப்பிள்ளையால் பெற்றேருக்கும் மருமகளால் மாமிக்கும் மாமியால் மருமகளுக்கும் இழைக்கப்படும் கொடுமையாகும்.

புரட்சி முதலில் தனிமனிதனில் அரும்ப வேண்டும். அது பின்பு சமுதாயத்தின் புரட்சியாக இனத்தின் புரட்சியாக உருவெடுக்கவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னலத்திற் கெதிராகப் போராடவேண்டும்,

**இன்னெருவனை அழவைப்பதன்மூலம்தான் நான் சிரிக்க வேண்டுமென்றுல் நான் சிரிக்காமலே இருப்பதே நல்லது, இன்னெருவனை அழிப்பதன் மூலம்தான் நான் வாழ வேண்டும் என்றுல் நான் வாழாமல் இருப்பதே நல்லது. இன்னெருவனது காணியைப் பறிப்பதன் மூலம்தான் நான் வீடு கட்ட முடியுமென்றுல் நான் வீடுகட்டாமல் இருப்பதே நல்லது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலை மாறவேண்டும்: மற்றவர்களை மாளவைப்பதன் மூலம்தான் நாம் மகிழ முடியும் என்று தப்பான கருத்தைத் கொள்ளும் மனிதர்களின் நெஞ்சங்களை மாற்றவேண்டும். நாமும் மகிழ்ந்து மற்றவர்களை மகிழ்விக்க முடியும் என்ற உளக் கிளர்ச்சியை மக்கள் உள்ளங்களிலே எழுப்பவேண்டும்.

உண்மையின் சார்பாக நீதியின் சார்பாக மனிமனிதனில் ஆரம்பிக்கும் புரட்சி நிட்சயமாக தார்மீக சமுதாயத்தை தோற்றுவிக்கும், மனித மாண்பினை மலர்விக்கும்.

## 5. வறுமையிலிருந்து மீள வழி

வறுமையிலிருந்து மனித சமுதாயம் மீள கிறிஸ்து காட்டுகின்ற வழி புரட்சிகரமானது.

- தன்னையே வெறுமையாக்குவதன் மூலம்.
- நிபந்தனையில்லா அன்பினை வெளிக்காட்டுவதன் மூலம்.
- முடியும் என்ற நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவதன் மூலம்

வறுமையிலிருந்து மீளுதல் சாத்தியமாகும் என்பது கிறிஸ்துவின் வாழ்க்கை நெறியிலிருந்து தெளிவாக்கப்படுகின்றது. ●

---

இன்னொருவனை அழவைப்பதன்மூலம்தான்
நான் சிரிக்கவேண்டுமென்றல்
நான் சிரிக்காமல் இருப்பதே நல்லது.
இன்னொருவனது காணியைப் பறிப்பதன்
மூலம்தான்
நான் வீடுகட்ட முடியுமென்றல்
நான் வீடுகட்டாமல் இருப்பதே நல்லது.
இன்னொருவனை அழிப்பதன் மூலம்தான்
நான் வாழமுடியுமென்றல்
நான் வாழாமல் இருப்பதே நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய விடுதலை

## 1. சீதனப்பிரச்சினை

தமிழ் சமூகங்களைப் பொறுத்தவரை சீதனப் பிரச்சினை இன்று, பிரதானமான பிரச்சினைகளில் ஒன்ருகக் காணப்படுகின்றது. பல இளம் பெண்கள் வாழ்க்கைப்படாமல் தத்தளிப்பதற்குக் காரணம் சீதனப்பிரச்சினையாகும். கல்யாண சந்தையில் பேரம்பேசி விற்கப்படும் ஒரு பொருளாக மாப்பிள்ளை கணிக்கப்படுகின்ருன். சீதனமானது திருமணத்தின் திருத்தன்மையயினை, மாண்பினைக் குறைத்துத் திருமணத்தினை ஒரு வியாபாரமாக மாற்றிவருகின்றது. பெண்வீட்டாரின் பொருளாதார கஷ்டத்தினை, வறுமையினைப் பற்றிச் சிறிதும் சிந்தியாது கட்டாயமாகச் சீதனப்பணத்தை அறவிட முனைவதின் காரணமாகப் பல பெண்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். சீதனத்துக்கு அடிமைப்பட்ட நிலையில் மனிதகுலம் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயம் நலிவுற்றுக் காணப்படுகிறது. இந்த அவல நிலையிலிருந்து தமிழ்ச் சமுதாயம் விடுதலைபெற சீதனப்பேய் விரட்டியடிக்கப்பட வேண்டும். சீதனக் கொடுமையிலிருந்து தமிழ்ச் சமுதாயத்தை மீட்டெடுக்கப் பெரியோர்களும், பெற்ருேர்களும் ஒத்துழைக்க வேண்டும். திருமணத்தின் திருத்தன்மை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சிதனம் என்ற சீரளிவுச் சாதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றாக ஒழிக்கப்படவேண்டும். மறுமலர்ச்சிக் கருத்துக்கள் மக்களின் மனதில் புகுத்தப்படவேண்டும். மனித மாண்பு மிளிரும் வகையில் சமுதாயச் சிராக்கல் உணர்வூட்டம் பெறவேண்டும்.

## 2. பெண்ணின விடுதலை

பெண் பேதையாகப் பாலின்பம் தரும் போதைப் பொருட்களாக மட்டுமே ஆண்களால் கணிக்கப்படுகிறாள். திருமணத்தின் முன்னர் தந்தையினால், தாயினால், ஆண் சகோதரங்களினால் கட்டுப்பட்ட நிலையில் பெண் வாழுகின்றாள். சில குடும்பங்களில் அவனது தம்பிமாரே அவளது செயற்பாடுகளிற்கு கட்டுபாடு விதிக்கின்றார்கள். திருமண மானதும் கணவனதும் மாமியாரினதும் கைப்பாவையாகின்றாள். அவள் பெற்ற பிள்ளைகள் வளர்ந்ததும் அவர்களது கண்டிப்பான கட்டுப்பாட்டிற்கும் அவள் ஆளாக்கப் படுகின்றாள். இவ்விதமாக ஒரு பெண் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை, சுயமாகச் சிந்தித்துத் தீர்மானம் எடுக்கத் தகுதியற்றவளாகத் தனது சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்பத் தனது வாழ்க்கை முறையை அமைப்பதற்கு லாயக்கற்றவளாக, அடிமையாக அன்றாடம் துன்புறுத்தப் படுபவளாக காணப்படுகிறாள். "பெண் வலிமை குறைந் தவள் எனக் கூறுவது குற்றம்; வலிமை என்பது நெறிப் பாங்கான சக்தி எனப் பொருள்படுமானால், பெண் ஆணையும் விட மிகவும் வலிமையானவள்" என்கிறார் மகாத்மாகாந்தி.

கிறிஸ்துநாதர் பெண்களுக்கு உரிய இடத்தைக் கொடுக்கத் தவறவில்லை. பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற கருத்தைக்கொண்ட யூத சமுதாயத்தில் ஆண்டவரின் சாயலாகப் படைக்கப்பட்ட அவர்களும் சம உரிமை உடையவர்கள் என்பதை எண்பித்து அவர்களுக்குத் தன் அன்புப் பணியில் முதலிடம் ஈந்தார். தண்ணீர் அள்ளவந்த சமாரியப் பெண் ஒரு சீடப்பெண்ணாக உருவாக்கப்படுகின்றாள் (அரு—4) பாவி என்று பலராலும் புறக்கணிக்கப்பட்டு வாழ்ந்தவள் பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பைப் பெற்றுப் புதுவாழ்வை எய்துகின்றான் (லூக். 7/36-50).

## 3. சமூக மரபு சாதி, இன வேபாடுகள்-

மனிதன் சமூகத்தை உருவாக்குகின்றான்; ஆனால் சமூகம் மனிதனை உருவாக்குகின்றது அல்லது அவனை உருக்குலைக்கின்றது. வரலாறு, பண்பாடு, மதநம்பிக்கை, அரசியல் அமைப்பு ஆகிய அனைத்தும் சமூக மரபினை ஏற்படுத்துகின்றன. இவற்றினால் சமூக மரபு வளர்க்கப்படலாம் அல்லது வளர்ச்சி துண்டிக்கப்படலாம். மனிதனின் மனநிலையும் மாற்றம் பெறலாம். சாதி, இனவேறுபாடுகள் சார்பாக அடிமைப் படுத்தப்பட்ட மனப்பாங்கு அகற்றப்படும்போதுதான் சமூக நீதி, சமதர்மம் நிலைநாட்டப்படமுடியும்.

சாதி, இன வேறுபாடுகளின் தோற்றத்தைப் பின்வரும் கோட்பாடுகள் விளக்குகின்றன.

(i) இனத் தூய்மைக் கொள்கை.

(ii) தொழில் மரபுக் கொள்கை.

(iii) மத நம்பிக்கை, தீட்டு அனுசாரக் கொள்கை.

உலகில் பல்வேறு சமூக மரபுகளிலும் மனிதரிடையே உயர்வு, தாழ்வு வேறுபாடுகள் காணப்பட்டாலும் இந்திய நாட்டில்தான் சாதி அமைப்பு பல நூற்றாண்டுகளாக வேரூன்றி, நடைமுறையில் மிகவும் வலுவுற்று விளங்குகின்றது. இன்று இந்தியாவில் மூவாயிரத்துக்கும் அதிகமான சாதிகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. (எஸ், வரதாச்சாரியார், 'சாதி' கலைக்களஞ்சியம், தொகுதி 4, சென்னை 1956) கி. பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து சைவநாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் சாதிப் பிரிவை எதிர்த்துப் போராடினார்கள். பிறப்பினால் மனிதன் உயர்ந்தவன், தாழ்ந்தவன எனக் கூறுவது தவறு என எடுத்துக்காட்டியது பக்தி இயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 18 ஆம் நூற்றுண்டின் இறுதியில் இந்திய சமூக அமைப்பின் அநீதிகளில் ஒன்றுகிய சாதி இனவேறுபாட்டை ஒழித்துக்கட்ட பலர் எழுந்தனர். ராஜாராம், மோகன்ராய், என்போர் சம உரிமையை நிலைநாட்ட முயன்றுர்கள். தயானந்த சரஸ்வதி எல்லா மனிதரும் அன்பையும் சமூகநீதியையும் கடைப்பிடிக்க வேண்டும் என வற்புறுத்திஞர், காந்தி அடிகள் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார் டாக்டர் அம்பேத்கார் தீண்டாமையை ஒழிக்க சட்ட அமைப்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென வாதாடினுர்.

சாதிக்கட்டுப்பாடு கிறிஸ்தவத்திற்கு முரணுனது; விரோதமானது; கிறிஸ்து அளித்த உரிமை வாழ்விற்கே உலை வைக்கின்றது. சாதி, இன, வேறுபாடுகள் கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை முற்றுக ஒழிக்கப்பட வேண்டியவையேயாகும்.

## 4. தொழிலாளர் நலம் பேணல்

தொழிலாளரது ஊழியத்துக்கேற்ப சரியான முறையில் தகுந்த ஊதியம் வழங்குவது, எதுவித பாரபட்சமுமின்றி அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுப்பது வேலை வழங்குவோரது பாரிய பணியாகும். தொழிலாளரின் நலம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் தொழிலாளர் நலன் சார்பாக அரசின் கடமைகளையும் 11ம் பத்திநாத பாப்பரசரும் 13ம் சிங்கராய பரப்பரசரும் வலியுறுத்திஞர்கள்.

தொழிலாளரின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவை பூர்த்தி செய்யப் படவேண்டும். "தொழிலாளரின் உரிமைகள் தாக்கப்படும்போது அவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் முன்வரவேண்டும். வேலைநிறுத்தங்கள் முதலான கலகங்கள் நிகழாது அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். சேமிப்புப் பணம், தொழில் தனியுடமைகளைப் பாதுகாக்க வேண்டும். தொழிற்சங்கங்கள் நன்கு இயங்கி உதவியளிக்க வேண்டும் என்று 23ம் அருளப்ப பாப்பரசர் 'தொழிலாளர் நிலைமை' சுற்றுமடலில் கூறுகின்றுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், 23ம் அருளப்ப பாப்பரசர் 'அவனியில் அமைதி' சுற்றுமடலில் பின்வருமாறு கூறுகின்றார்: ''எல்லா வகுப் பினரும் உடல்நலம், நீர் வெளிச்ச வசதிகள், போக்குவரத்து வசதிகள், கல்வி வசதிகள் போன்றவற்றில் பங்கெடுக்கவேண் டும். ஒருநாட்டை வளமாக்குவது பொருட்களின் நீதியான பகிர்தலே. நீதியின் படி அதிக தொகையானோர்க்கு வேலை வழங்கப்படவேண்டும். பொருட்களின் விலைவாசிக்கும் சம்ப ளத்திற்குமிடையில் சமநிலை இருக்க வேண்டும். அப்பொழுது பொருளாதாரம் முன்னேறவும் நாடு நலம்பெறவும் இட முண்டு.''

எனவே, ஒவ்வொரு தொழிலாளியும் தான் மனிதன் என்ற வகையில் மனித மாண்புடன் மிளிரக்கூடிய விதமாய் அவ னது தொழில் அவனுக்கு மகத்துவத்தைக் கொடுக்க வேண் டும். தொழில் ரீதியாக ஒருவன் மட்டம்தட்டப்படுவது நியாய மற்றதாகும். ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் தொழி லின் நிமித்தம் மாட்சிமை பெறுகிறான். இறைவனின் தெய் வீக ஆற்றலில் பங்கெடுக்கின்றான் என்ற கருத்து நிறைவேறும் வண்ணம் சமூகம் எல்லாத் தொழிலினதும் சமபுனிதத் தன் மையை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும்.

## 5. அரசியல் விடுதலை

மனித அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது மனிதாபி மானமற்ற செயலாகும். எமது நாட்டினில் எம் மக்கள் இன்று உரிமைகளை இழந்து, உடமைகளை இழந்து, தமது ஆருயிர் அன்பு நெஞ்சங்களை அரசாங்க பயங்கரவாதத்திற்குப் பலியாக்கிய நிலையில் தொடர்ந்து போராட்டத்தை நடாத்தி வருகின்றார்கள். அரச படைகளின் அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் அட்டகாசங்களும் அத்துமீறல்களும் முற்றாக முறியடிக்கப்பட வேண்டியவையே.

தாயகம் மீட்கத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டம் இலட்சியம் சார்ந்ததாயுள்ளது. எந்தவொரு இலட்சியப் போராட்டமும் தனிமனித சுதந்திரத்திற்குப் பங்கம் விளைவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத ஒன்ருக, மனித மகத்துவத்தை மதிக்கின்ற ஒன்ருகக் காணப்படும்பொழுதே அதன் புனிதத் தன்மை காக்கப்படும். அது தவறும் பட்சத்தில் அங்கே அமைதியீனம், அடிமைத் துவம், அதிகார வெறி ஆகியனவே மீளவும் தோன்றும் ஆபத்தான நிலை உருவாகும். அடிமைத்துவத்திலிருந்து விடு தலை பெற ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மீண்டும் ஒருவகை அடிமைத்துவத்திற்கு அடிமையாவதா? இலட்சிய ஒன்றிப்பும் புரிந்துணர்வும் இல்லாத எந்தவொரு போராட்டமும் பய னற்றதே. "தனக்கு எதிராகப் பிரியும் எந்த அரசும் பாழாய்ப் போம்; வீடுகளும் ஒன்றன்மேல் ஒன்ருய் விழுந்தழியும். தனக்கு எதிராகப் பிரியும் சாத்தானின் அரசு எப்படி நிலைக் கும்?" (லூக். 11 : 17–18).

## 6. மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை

நம்பத் தகாதனவற்றில் நம்பிக்கை வைத்து வாழ்க்கையை வீணடித்தலே மூடநம்பிக்கையாகும். அதாவது அசட்டு நம்பிக் கைகள் அசையா நம்பிக்கைகளாக மாற, மதியை மறந்து, விதியே கதி என்று நிம்மதி இழந்து தவித்தலே மூடநம்பிக் கைகளின்படி வாழுதலாகும். 'கறுப்புப் பூனை பாய்ந்தால் காரியம் பிழைக்கும்' 'பல்லிச் சாத்திரம் பலிக்கும்' 'மாத அழி வில் பயணம் செய்யாதே' போன்றவற்றை மூட நம்பிக்கைக ளுக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். எதிர்பார்க்கைக்கும் நிகழ்விற்குமிடையே எதுவிதமான காரணகாரியத் தொடர்பு காணப்படாவிடினும் அசாதாரணமான நிகழ்வு நிர்ணயிக்கப் பட்ட விளைவாகவே கணிக்கப்படுகின்றது. கைரேகையை அடிப் படையாக வைத்து சோதிடம் கூறுபவர்கள் எல்லாம் 'சமயத் திற்குத் தகுந்தாற் போன்று வேடம் புனைபவர்கள்' என்றும் 'பொதுமக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்கள்' என்றும் இந்திய எழுத்தாளர் மைக்கல்ராஜ கூறுகின்ருர். நாம் நடை முறையில் காணும் சோதிடம் (மரத்தடி சோதிடம், கிளிச் சாத் திரம், செய்தித்தாள் சோதிடம் முதலியன) விஞ்ஞான ரீதியாக வளராத ஒன்றேயாகும். இது வாழ்க்கைப் பயம், நம்பிக்கை இழத்தல் போன்ற உள்ளக் கோளாறுகளினும், முயற்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்குக் காரணமாகி, நன்மை தின்மைகளைத் தானுகவே பகுத்தறியும் முயற்சியைக் கைவிடுவதிலும் முடிவடைகின்றது என்று டாக்டர் ஷாங்க் கூறுகின்முர்.

மாயவித்தை, மாந்திரீகம், பில்லி சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை வைத்தவர்களாய் பலர் இறை நம்பிக்கை குறைந்தவர்களாய் வாழ்வதும் கண்கூடு. மனிதன் இவ்விதமாக இறைவனில் நம்பிக்கை இழந்ததின் காரணமாக, தன்னிலே நம்பிக்கை அற்றவனுகி மன நிம்மதி இழந்த நிலையில் பதட்டமான மனநிலையில் வாழுகின்முன். மூடநம்பிக்கைகள் மனித உள்ளத்தைப் பலவீனப்படுத்துவதோடு மனிதனின் பகுத்தறிவையும் சிதைவுறச் செய்கின்றது. இவ்வாறு மனிதன் மூட நம்பிக்கைகளின் காரணமாக சுயசிந்தனை செய்தல், சுயதீர்மானம் எடுத்தல் என்பவை இல்லாதவனுய் அடிமை வாழ்க்கைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்கின்முன். எனவே சமூகக் கண்ணேட்டத்தில் மூடக் கொள்கைகளிலிருந்து மனித சமுதாயம் விடுதலை பெறுதல் சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

**இருட்டினில் வேடங்கள் வேண்டாம்;**
**இறை பலமே மனித நலம் ஆகட்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# மார்க்சியமும் விடுதலை இறையியலும்

மார்க்சியமும் கிறிஸ்தவமும் மனித விடுதலை சம்மந்தமான விடயங்கள், சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவற்றில் ஒத்துக் காணப்படினும் அடிப்படையில் அவைவேறுபட்டு நிற்கின்றன. மார்க்சியம்இறை இருத்தலை மறுக்கின்றது. ஆனால் கிறிஸ்தவம் இறை இருத்தலை அடிப்படையாகக் கொண்டது.

மார்க்சியம் கார்ள் மாக்சினால் கண்டறியப்பட்ட ஒரு விடுதலை மெய்யியல் ஆகும்.

கிறிஸ்தவம் மனிதனின் முழுவாரியான விடுதலைக்கு வழியையும் வல்லமையையும் கொடுக்கும் மறையாகும்.

## 1. தத்துவஞானப் பொருள்முதல்வாதம்

மார்க்சியக் கருத்தின்படி, ஃபாயர்பாகின் பொருள் முதல் வாதத்தை உள்ளிட்ட பழைய பொருள்முதல்வாதத்தின் அடிப்படையான குறைபாடுகள் பின்வருமாறு:

1. இரசாயனவியலிலும் உயிரியலிலும் ஏற்பட்டிருக்கிற மிக நவீனமான முன்னேற்றங்களை அது கணக்கில் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பழைய பொருள்முதல்வாதம் வரலாற்றிற்குப் புறம்பானது; இயக்கவியலுக்கும் புறம்பானது.

3. 'மனிதசாரம்' என்கிற விஷயத்தை சூட்சுமமாகப் பார்த்ததேயொழிய 'சகல சமுதாய உணர்வுகளின்' ஒரு 'சேர்மமே' இந்த 'மனிதசாரம்' என்று அது கருதவில்லை. ஆகவே உலகத்தை மாற்றியமைப்பதே முதன்மையான வேலையாயிருக்கையில் அது உலகத்தைப்பற்றி இவ்வாறு வியாக்கியானம் செய்வதோடு நின்றுவிட்டது. அதாவது 'புரட்சிகரமான நடைமுறை நடவடிக்கையின்' முக்கியத்துவத்தை அது புரிந்துகொள்ளவில்லை.

மார்க்சின் வரலாற்று பொருள்முதல்வாதம் விஞ்ஞான சிந்தனைக்குக் கிடைத்த வெற்றியே. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னுமொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை, உதாரணமாக நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவ சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கிறது என்பதை வரலாற்று பொருள்முதல்வாதம் காட்டுகிறது.

## 2. மார்க்சின் பொருளாதார சிந்தனை

பண்டப் பரிமாற்றம் தனித்தனியான உற்பத்தியாளர்களிடையே சந்தை மூலமாக ஏற்படும் பிணைப்பைக் காட்டுகிறது. அதாவது மனிதனின் உழைப்புச் சக்தியே ஒரு பரிமாற்றப் பண்டமாகிவிடுவதைக் குறிக்கின்றது. கூலிபெறும் உழைப்பாளி நிலம், ஆலைகள், உழைப்புக்கருவிகள் ஆகியவற்றின் உரிமையாளரிடம் தனது உரிமைச் சக்தியைச் விற்கிறான். அவனது உழைப்பின் ஒரு பகுதி தனதும் குடும்பத்தினதும் பிழைப்புச் செலவில் கழிய மீதி முதலாளிக்கு உபரிமதிப்பை உண்டாக்கின்றது. இந்த உபரிமதிப்புத்தான் முதளாளி வர்க்கத்தின் செல்வத்திற்குத் தோற்றுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதனத்தின் திரட்டல் பற்றிய மார்க்சின் பகுப்பாய்வு மிகவும் முக்கியமானது. மூலதனத்தின் திரட்டல் என்பது உபரிமதிப்பின் ஒரு பகுதி மூலதனமாக மாற்றப்படுவது ஆகும். உபரிமதிப்பு உற்பத்தி சாதனங்களுக்கு ஒரு பங்காகவும் மாறுபடும் மூலதனத்திற்கு மற்றொரு பங்காகவும் பிரிக்கப்படுகிறது. மூலதனத்தின் திரட்டல் தொழிலாளர்களுக்குப் பதிலாய் இயந்திரங்களைக்கொண்டு வேலைகளை முடித்துக் கொள்ளும் போக்கை விரைவுபடுத்துவதால் ஒரு புறத்தில் செல்வத்தையும் மறுபுறத்தில் வறுமையையும் உண்டாக்குகிறது.

## 3. சோசலிசம்

சிழ்வடியும் புண் எனக்கருதப்பட்ட பாட்டாளி வர்க்கத்திற்குப் புத்துயிர் கொடுத்தார்கள் கார்ள் மார்க்சும் எங்கெல்சும். முதலாளித்துவ சக்திகளால் அடிமைப்படுத்தப்பட்டு, சுரண்டப்பட்டு, சுமைப்படுத்தப்பட்டு மிகவும் மோசமான நிலையில் பலவீனமுற்ற தொழிலாளர் அந்நியமாக்கப்பட்டு, வேண்டப்படாதவர்க்கமாக புறக்கணிக்கப்பட்டார்கள். இச்சூழலில் தொழிலாளி வர்க்கம் தன்னைத்தானே அறிந்துகொள்ளுமாறு, தன்னைப்பற்றிய உணர்வு கொள்ளுமாறு அவர்கள் போதித்தார்கள்.

நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவித சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டுகொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்களில் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்வோராகவும் இருந்தனர்; எப்போதும் இருப்பார்கள். பழைய அமைப்புமுறை எவ்வளவு அநாகரிகமாகக் காணப்பட்டபோதிலும் ஏதாவதொரு ஆளும் வர்க்கத்தின் சக்திகளைக்கொண்டு அது நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது. இதனை முறியடிப்பதற்குப் புது உலகைப் படைக்கும் திறன்பெற்ற சமுதாயத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளை ஒன்று திரட்டி போராட்டத்திற்கு ஒழுங்கமைக்க வேண்டும்.

மார்க்சின் தத்துவஞானப் பொருள்முதல்வாதம் தான் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களெல்லாம் அதுவரை உழன்றுகொண்டிருந்த ஆன்மீக அடிமைத்தனத்தினின்று வெளியேறும் வழியைப் பாட்டாளி வர்க்கத்திற்குக் காட்டியிருக்கிறது. மதம் என்ற போர்வையில் மிதமிஞ்சிய மதச்சடங்குகளின் வழியாக மனிதன் உண்மை நிலையை நோக்காது அடிமைத்தனத்தில் வாழ்ந்ததின் காரணமாக மார்க்ஸ் மத அடிமைத்துவத்திலிருந்து விடுபடும் வழியைக் காண்பித்தார்.

## 4. உடன்பாடு

மார்க்சியமும் விடுதலை இறையியலும் இவ்வுலக விடுதலையை இவ்வுலகை உருமாற்றத்தை, சமதர்மம், சகோதரத்துவம், சுதந்திரம் போன்ற நற்பண்பாடுகளை இவ்வுலகு பெற்றிருக்கும் நிலையை முழுமையான விடுதலையாக எடுத்தியம்புகின்றன.

அத்தோடு மார்க்சியமும் விடுதலை இறையியலும் பிறருடைய நல்வாழ்விற்காக தம்மை அர்ப்பணித்து நிற்றலை, அன்னியோன்னியமான முறையில் பிறரது விடுதலை வாழ்வில் பங்குகொள்வதை முக்கியமானவையாகக் கருதுகின்றன.

இவை மனிதனைச் சமூக உறவுகளிலிருந்து பிரித்து வைக்காது அவனை உறவுகளின் ஒட்டுமொத்தமாகக் கண்டுபிடிகின்றன; மனிதனைச் சகல படைப்புகளின் சிகரமாகக் கருதுவதோடு மனிதனை மனிதனாக வாழவிடாது அடிமைப்படுத்துகின்ற சகல அமைப்புகளையும் சிதைவுறச்செய்து, மனித காருண்யத்தை வளர்க்கின்றன.

எனவேதான், விடுதலை இறையியலாளரான என்ட்றிக்கே டுசல் என்பவரும் ஜொசே மிராந்தா என்பவரும் இறைவனை அணுகும் வழி மனிதனுக்குப் பணிபுரிவதே என்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் மார்க்சியமும் கிறிஸ்தவமும் வேறு விதமான மட்டங்களில் விடுதலையைப் பற்றி கரிசனை காட்டுவதாகத் தோன்றியபோதிலும் கிறிஸ்தவ விடுதலையை காலத்திற்கேற்ப புரிந்துகொள்வதற்கு மார்க்சியத் தத்துவஞானமும் ஊக்குவிப்பாய் உள்ளது. கடந்த காலத்தில் பாவம் தனிமனிதனின் குறையாகக் கருதப்பட்டதே ஒழிய சமூகத்தையும் சமூக பொருளாதார அமைப்புகளையும் அழிக்க வல்லதாக கருதப்படவில்லை. அண்மையில் மார்க்சியத் தத்துவங்களைக் கொண்டு நுண்ணியமாக பொருளாதார, அரசியல், சமூக அமைப்புகளிலே காணப்படுகின்ற சூழல்களுக்கு பாவமே காரணம் என அறியப்படுகின்றது.

மனிதன் — அந்நியமாக்கல் — மனிதன் / சமூகம் / இறைவன் = அடிமைத்துவம்

மனிதன் - உறவு | மனிதன் / சமூகம் / இறைவன் = விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# வரலாற்றில் இறைவன்

ஆதியிலே ஆரம்பத்தில், இறைவன் பிதாப்பிதாக்கள் வழியாக, நீதிபதிகள் வழியாக, அரசர்கள் வழியாக, இறை வாக்கினர் வழியாக இஸ்ராயேல் மக்களோடு மறைமுகமாகப் பேசிய இறைவன் ஈற்றினில் நேரடியாக யேசுக்கிறிஸ்து மூல மாக மனிதர்களுக்கு தம்மை மகத்துவமான முறையில் வெளிப்படுத்தினர். தமக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள உறவை பகிரங்கமாக தெளிவான முறையில் மனித ரோடு மனிதனுக சங்கமமாவதன் மூலமாக தமது ஆற்றல் மிகு பிரசன்னத்தை உறுதிப்படுத்தினர். இதனுலன்ருே "தனது ஆள் தன்மை இரகசியத்தை இறைவன் வரலாற்றில் வெளிப்படுத்தினர்" என்று வேதாகம வல்லுநர் வொன் ருட் கூறுகின்ருர்.

## 1. உடன்படிக்கை

இஸ்ராயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டு எடுக்க இறைவன் நானே இஸ்ராயேல் மத்தியில் வாழும் இறைவன் நானே (யாத். 29/45-46) அவர்கள் எனது மக்களாகவும் நான் அவர்களின் கடவுளாகவும் இருக் கின்றேன் என்று ஆண்டவராகிய யாவே கூறுகின்ருர் (எசெ. 37/27-28). இவ்விதமாக இறை மக்களான இஸ்ராயேலருக் கும் அனைத்தையும் படைத்த ஆண்டவராகிய யாவேக்கும் இடையேயான தொடர்பு ஆழமான உறவாக இஸ்ராயேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை ஒரு தெரிந்து எடுக்கப்பட்ட, அர்ச்சிக்கப்பட்ட ஓர் இனமாக, பாதுகாத்து வந்த அன்பு உறவாக, பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு நூல்கள் வர்ணிக்கின்றன.

இந்த உறவு ஒரு புதிய உறவாக, இரத்தத்தினால் ஆகிய ஒரு புதிய உடன்படிக்கையாக மேலும் நிலைநாட்டப்படுகின்றது. "இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நாம் இஸ்ராயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை செய்வோம் என்கிறார் ஆண்டவர்; இது நாம் எகிப்து நாட்டினின்று விடுவித்து இவர்களுடைய தந்தையரைக் கைப்பிடித்து நடத்தி வந்தபோது நாம் அவர்களோடு செய்த உடன்படிக்கையை போன்றிராது......

நமது திருச்சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்போம். அவர்களுடைய இதயங்களின்மேல் அதை எழுதுவோம். நாம் அவர்களின் கடவுளாய் இருப்போம். அவர்கள் நம் மக்களாய் இருப்பர் என்கிறார் ஆண்டவர்" (எரே 31/31-33).

## 2. இறை ஆலயம்

இந்த இரத்தத்தினால் ஆன உடன்படிக்கை கிறிஸ்துவில் முழுமை பெறுகின்றது. "வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்; அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்." தந்தையிடமிருந்து அவர் பெற்ற இம் மாட்சிமை ஒரே பேறான அவருக்கு ஏற்ற மாட்சிமையே. ஆகவே அவர் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினார்" (அரு 1/14). கிறிஸ்துவே ஆலயமும் ஆண்டவனுமாக விளங்குகின்றார். அதேவேளை, ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு கிறிஸ்தவ குழாமும் பரிசுத்த ஆவியின் ஆலயமாக விளங்குகின்றது என்கின்றார் புனித சின்னப்பர். கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது. நீங்களே அவ்வாலயம் (1 கொரி. 3/16-17).

இன்னும் ஒவ்வொரு கிறிஸ்தவன் மட்டும் அல்ல ஒவ்வொரு மனிதனும் ஆண்டவரின் ஆலயமாக அமைகின்றான். "ஒருவன் அன்பு செய்தால் என் வார்த்தையைக் கேட்பான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தையும் அவன்மேல் அன்புகூர்வார்; நாங்களும் அவனிடம் வந்து அவனோடு குடிகொள்வோம்'' (அரு. 14/23). அன்புவழி வாழ்கின்ற, அறநெறி வாழ்கின்ற ஒவ்வொரு மனித உள்ளத்திலும் இறைவனே இருக்கின்றார். ''கட்புலன் ஆகா முறையில் பலர் ஆலயத்தை அமைத்துக் கொள்ளுகின்றார்கள்'' என்கிறார் கொன்கர்.

இவற்றிலிருந்து இரண்டு உண்மைகள் புலனாகின்றன.

1வது இறைவனது பிரசன்னம் உலகளவாதல். அதாவது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திலிருந்து உலகமக்கள் அனைவரிடையேயும் இறைப்பிரசன்னம் பரவலாக்கப்படல்.

2வது, இறைப்பிரசன்னத்தை அகவயமாக்குதல். அதாவது வெளிப்புற அமைப்புக்களிலிருந்து உள்ளக இதயமதில் ஆண்டவனை உறையச் செய்தல்.

## 3. சந்திப்பு

மனிதன் ஒவ்வொருவனும் இறைவனின் ஆலயமாக விளங்குவதால் மனிதரை அன்பு உறவில் எதிர்கொள்ளும் போது இறைவனையே சந்திக்கின்றோம். அயலவருக்கு நீதி காண்பித்தலும் அவர்களை அன்பு செய்தலும் அயலவரில் உறைகின்ற ஆண்டவரை சந்திப்பதேயாகும். இறைவனை அன்பு செய்தல் என்பது ஏழைகள் சார்பாகவும் துன்புறுத்தப் படுவோர் சார்பாகவும் நீதியைக் காண்பித்து பிறர் அன்பினை நிலைநாட்டுவதேயாகும். ''நான் பசியாயிருந்தேன்; நீங்கள் எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன்; எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். நோயுற்று இருந்தேன்; என்னைப் பார்க்க வந்தீர்கள். சிறையில் இருந்தேன்; என்னைக் காண வந்தீர்கள். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். சின்னஞ்சிறியவர் இவர்களுள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றை செய்தபொழுதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத். 25: 35–37, 40) என்ற கிறிஸ்துவின் கூற்று அயலவர் சார்பான எமது அன்பு நடவடிக்கைகளை வரலாற்றினில், வையத்தினில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைச் சந்திக்க இட்டுச் செல்லுபவைகளாக அமைகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

**இறையன்பும் பிறரன்பும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை, ஒருபோதும் அவை ஒன்றோடு ஒன்று முரண்பட்டவையல்ல.**

நல்ல சமாரித்தன் உவமையில், ''என் அயலான் யார்?'' என்ற கேள்விக்கு யேசு, கள்வர் கையில் அகப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, குற்றுயிராய் விடப்பட்டு, அவதி உற்ற நிலையிலிருந்த யூதனுக்கு புனர்வாழ்வு கொடுத்த சமாரித்தனை அயலவன்மீது அன்பு காட்டியவன் என்கின்றார். அந்த யூதன் ஆபத்தான நிலையில் இருந்ததைக் கண்டதும் அவனுக்கு உதவி செய்வதால் தனக்கு ஏதாவது ஆபத்து நிகழுமோ என்று தன்னை மையமாக வைத்துக் கேள்வி கேட்கவில்லை. மாறாக, அவனுக்குத் தான் உதவி செய்யாவிடில் அவனுடைய நிலை என்ன என்று அவனை மையமாக வைத்து கேள்வி கேட்டதன் காரணமாக தனது பரம்பரை எதிரியான யூதனுக்கு சமாரித்தனால் கருணை காட்ட முடிந்தது.

அயலவரில், ஏழை எளியவரில், துன்புறுத்தப்படுவோரில் இறைவனைக் காண முயலும் ஒவ்வொரு கணத்திலும் இறைவனே எம்மைச் சந்திக்கிறார். மற்றவர்களின் மகிழ்ச்சிக்காக நல்வாழ்விற்காக, சமூக நலனுக்காக, சமுதாய வளர்ச்சிக்காக வாழ முற்படும்போது இறைமயமான சூழல் உருவாக்கப்படும். எங்கும் அமைதியும், ஆனந்தமும் நிலவும். எல்லாம் இன்பமயம் என்ற இறைப் பிரசன்னத்தினால் வலுப்படுத்தப்பட்ட உருப்படுத்தப்பட்ட இறை ராச்சியமாக மண்உலகு மாற்றப்பட்டு, மாட்சிமைப் படுத்தப்படும் ●

**வாழ்க அவர் நாமம்!**

**வளர்க அவர் பெயரே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராஜகத்திற்கெதிரான மானிடத்தின் நீதியான போராட்டத்தை — சமூக - பொருளாதார, அரசியல் அடக்குமுறைகளிற்கெதிரான மக்களின் விடுதலையை, கிறிஸ்துவின் நற்செய்தியாக எடுத்துக்கூறும் அருட் தந்தை வின்சென்ற் பற்றிக்கின் "விடுதலை இறையியல்" மக்களே வரலாற்றின் நாயகர்களும், வரலாற்றைப் படைப்பவர்களுமாவர் என்ற உண்மையை எமக்கு மீண்டும் உணர்த்தி நிற்கின்றது.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா
மெய்யியற் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

★ ★ ★

வறுமைக்கும் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் உள்ளாகும் மக்களது தேவைகளுக்கும் வினக்களுக்கும், கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படைச் சட்டக அமைப்புள் நின்று பொருத்தமான பதிலை அளிக்கும் முயற்சியின் பெறுபேறே விடுதலை இறையியலாகும். இன்றைய எமது சமூக அரசியற் சூழல் இக்கருத்தோட்டம் எம்மவர் மத்தியில் இடம்பெற வழிவகுத்துள்ளது. விடுதலை இறையியல் என்ற இந்நூல் மனிதகுல விடுதலையில் அக்கறை கொண்ட அனைவரதும் சிந்தனையைத் தூண்டும் என எண்ணுகிறேன்.

மௌ. சித்திரலேகா
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக் கழகம்.

★ ★ ★

மக்கள் மனதில் ஊறிக் கிடக்கும் மூடக் கொள்கைகளைக் களைந்தெறியவும் குடும்ப உறவில் உள்ள ஏற்றத் தாழ்வைப் புரிந்து வாழவும் வழிகாட்டுகின்றார் இவர்.

மல்லிகை
டிசம்பர் 1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org